Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

FRIDAY, JANUARY 6, 2023

வெள்ளிக்கிழமை ஜனவரி 06, 2023 | ஒளி: 08 கதிர்: 181 | பக்கம்:09 | நகரப்பதிப்பு | Free



## எரிவாயு விலையை குறைத்தது லிட்ரோ

12.5 கிலோ கிராம் நிறையுடைய எரிவாயு சிலிண்டரின் விலை 201 ரூபாயால் குறைக்கப்பட்டுள்ளதாகவும் 5 மற்றும் 2.3 கிலோ கிராம் சிலிண்டர்களின் விலைகளும் முறையே 80 மற்றும் 38 ரூபாய்களால் குறைக்கப்பட்டுள்ளதாக லிட்ரோ நிறுவனம் நேற்று (05) அறிவித்தது.

நேற்று (05) நள்ளிரவு முதல் அமலாகும் வகையில், குறித்த விலைத்திருத்தம் அமலாகும் என்று நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் அறிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயத்தில்

## தேவையான ஆவணங்களை விரைவாகப் பெற்று விசாரிக்கவும்

### டயானா வழக்கில் சீ.ஐ.டியினருக்கு உத்தரவு



இராஜாங்க அமைச்சர் டயானா கமகேவின் குடியுரிமை தொடர்பாக, பிரித்தானிய உயர்ஸ்தானி கராலயத்தில் இருந்து தேவையான ஆவணங்களை விரைவாகப் பெற்று, விசாரணைகளை முன்னெடுக்குமாறு குற்றப்புலனாய்வு திணைக்களத்துக்கு கொழும்பு பிரதான நீதவான் பிரசன்ன அல்விஸ், வியாழக்கிழமை (05) உத்தரவிட்டார்.

தொடர்ச்சி P2

ஜனாதிபதியின் காலக்கெடுவுக்குள் தீர்வின்றேல் தமிழ் மக்களை அணி திரட்டி

# போராட்டங்களில் குதிப்போம்

### கூட்டமைப்பு ஜனாதிபதிக்கு எச்சரிக்கை

■ பா.நிரோஸ்

சமஷ்டி கட்டமைப்பில் மட்டுமே தமிழ் மக்களுக்கான அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு சாத்தியம் என்பதே தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நிலைப்பாடு எனத் தெரிவிக்கும் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ சுமந்திரன் எம்.பி, ஜனாதிபதி வழங்கிய காலக்கெடுவுக்குள் தமிழ் மக்களுக்கு தீர்வை வழங்கவில்லை என்றால், தமிழ் மக்களை அணி திரட்டி போராட்டங்களில் ஈடுபடுவோம் எனவும் எச்சரிக்கை விடுத்தார்.

தமிழ் மக்களின் இனப் பிரச்சினைக்கு தீர்வுக் காணும் வகையில் டிசெம்பர் 13ஆம்



திகதி சர்வகட்சி மாநாடு நடத்தப்பட்டது. இதன்போது பல முற்போக்கான கருத்துகள் வெளியிப்பட்டன. நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவுக்கு இதில் முக்கியப் பங்குள்ளது. தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை, காணாமலாக்கப்பட்டோருக்கு நீதி, எமது நிலங்கள் தொடர்ந்து அபகரிக்கப்படுகின்றன; இவற்றுக்கான தீர்வுகளே பிரதான விடயமாக உள்ளன எனவும் தெரிவித்தார்.

நல்லிணக்கத்தை அரசியல் தீர்வின் ஊடாக அடைய முடியுமா என்பதை பெப்பரவரி 04ஆம் திகதிக்கு முன்னர் தெரிந்துகொள்ள முடியும் என ஜனாதிபதி கூறியிருக்கிறார். அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய இறுதித் தீர்வு என்ன என்பதை நாம் அனைவரும் பேசி ஒரு முடிவுக்கு வர வேண்டும்.

தொடர்ச்சி P2

## சரணடைந்த முன்னாள் போராளிகளுக்கு நடந்தது என்ன?

### 17க்கு முன்னர் பதில் என்கிறது இராணுவம்

■ பா.நிரோஸ்

இராணுவத்தினரிடம் சரணடைந்த தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்பான முழுமையான தகவல்களை இம்மாதம் 17ஆம் திகதிக்கு முன்னர் வழங்கப்போவதாக தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழு முன்பாக இலங்கை இராணுவம் சாட்சியம் வழங்கியுள்ளது.

தகவலறியும் உரிமைச் சட்டத்தின் கீழான மேன்முறையீடு, தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழு முன்பாக ஓய்வுபெற்ற நீதியரசர் உபாலி அபேவர்தன தலைமையில் நேற்று முன்தினம் (04) பரிசீலனைக்கு எடுத்துகொள்ளப்பட்டது. இதன்போதே இலங்கை இராணுவம் இவ்வாறு தெரிவித்திருந்தது.

இராணுவத்திடம் சரணடைந்த முன்னாள் போராளிகள், சரணடையும் போது அவர்களை பொறுப்பேற்றுக்கொண்ட இராணுவத் தளபதிகள், படைப் பிரிவு, சரணடைந்தவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் என 6 கேள்விகளைக் கொண்ட விண்ணப்பமே இராணுவத்துக்கு

தொடர்ச்சி P2



உள்ளூராட்சி மன்றங்களை

## கலைக்கும் அதிகாரம் ஆணைக்குழுவுக்கு உள்ளது

■ பா.நிரோஸ்

உள்ளூராட்சி மன்றங்களைக் கலைப்பதற்கான அதிகாரம், தேர்தல் ஆணைக்குழுவுக்கே காணப்படுவதாக தெரிவிக்கும் பிரதமர் தினேஸ் குணவர்தன, எவ்வாறாயினும் மார்ச் 18ஆம் திகதியுடன் தற்போதுள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கான ஆட்சிக் காலம் நிறைவடைவதாகவும் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## பேச்சுவார்த்தையில் எங்களையும் சேருங்கள்

### ஹக்கீம் கோரிக்கை

■ பா.நிரோஸ்

இனப்பிரச்சினைக்கு அனைவரும் இணங்கக்கூடிய நல்லதொரு தீர்வை ஜனாதிபதி வழங்குவாராக இருந்தால் அதில் முஸ்லிம் தரப்பையும் இணைத்துகொள்ள வேண்டும் என ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ள ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம், இனப்பிரச்சினை தொடர்பான பேச்சுவார்த்தைகள் குறித்து முஸ்லிம்கள் மத்தியில் விசமத்தனமான பிரசாரங்கள் முன்னெடுக்கப்படுவதாகவும் தெரிவித்தார்.



தொடர்ச்சி P2

## நாடு திரும்பினார் கோட்டா

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, டுபாயில் தனியார் ‘ஃபேம் பார்க்’ இல் பல விலங்குகளுடன் புகைப்படம் எடுத்துள்ளார். ‘ஃபேம் பார்க்’ என்பது தொழிலதிபர் சைஃப் அஹ்மத் பெல்ஹாசாவுக்கு சொந்தமான ஒரு கவர்ச்சியான விலங்கு பண்ணையாகும். இங்குதான் அவர் இந்தப் புகைப்படங்களை எடுத்துள்ளார். அவர்,



தனது குடும்பத்தினருடன் நேற்று (05) காலை நாடு திரும்பினார்.

## போர்ட்சிட்டியில் டேவிட் கெமரன்



தனிப்பட்ட விஜயமாக இலங்கை வந்துள்ள பிரித்தானியாவின் முன்னாள் பிரதமர் டேவிட் கெமரன், கொழும்பு போர்ட்சிட்டியை நேற்று முன்தினம் பார்வையிட்டிருந்தார். இதன்போது இலங்கை முதலீட்டுச்சபை உறுப்பினர்கள் உள்ளிட்ட அதிகாரிகளுடனும் அவர் கலந்துரையாடியிருந்தார்.

ஈஸ்டர் தின தாக்குதல்:

## பிரதிவாதிகளுக்கு பிணை நிராகரிப்பு

2019ஆம் ஆண்டு ஈஸ்டர் தினத்தன்று, கத்தோலிக்க தேவாலயங்கள் மற்றும் ஐந்து நட்சத்திர ஹோட்டல்களை இலக்கு வைத்து நடத்தப்பட்ட தொடர் குண்டுவெடிப்பு தாக்குதலுக்கு உதவியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ள நௌபர் மௌலவி உள்ளிட்ட 25 பிரதிவாதிகளின் பிணைக் கோரிக்கையை கொழும்பு நிரந்தர நீதாய மேல் நீதிமன்றம், நேற்று (05) நிராகரித்தது.

தொடர்ச்சி P2

## தேர்தலை நடத்த நாம் தடையல்ல

### சபைக்கு அறிவித்தது அரசாங்கம்

■ பா.நிரோஸ்

உள்ளூராட்சிமன்ற தேர்தல் தொடர்பில் குழப்பமோ, சந்தேகமோ ஏற்படுத்திக்கொள்ளத் தேவையில்லை எனத் தெரிவிக்கும் அரசாங்கம், உள்ளூராட்சி மன்ற தேர்தலை காலந்தாழ்த்தி தடைகளை ஏற்படுத்த மாட்டோம் எனவும் பாராளுமன்றத்துக்கு அறிவித்தது.

பிரதி சபாநாயகர் தலைமையில் நேற்று கூடிய இவ்வருடத்துக்கான முதலாவது பாராளுமன்ற அமர்வின் ஆரம்பத்திலேயே, உள்ளூராட்சிமன்ற தேர்தல் திருத்தச் சட்டமூலத்தால் சபையில் பெரும் சர்ச்சை ஏற்பட்டது. இதனால் ஆளுங்கட்சி, எதிர்க்கட்சியினருக்கு இடையில் கடும் வாய்த்தர்க்கம் ஏற்பட்டது. இதன்போது உரையாற்றிய பிரதமர் தினேஸ் குணவர்தனவும், நீதி அமைச்சர் விஜயதாஸவுமே மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2

## கூடுகிறது கூட்டணி

தமிழ் முற்போக்கு கூட்டணியின் அரசியல் குழு கூட்டம், எதிர்வரும் எட்டாம் திகதி ஞாயிறன்று நண்பகல் 12.30 மணிக்கு ஹட்டன் கிருஷ்ண பவன் விடுதியில் நடைபெறும். இக்கூட்டத்தில், தேர்தல் ஆணைக்குழுவால் அறிவிக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி தேர்தல்களை எதிர்கொள்வது தொடர்பிலும், நடப்பு அரசியல் நிலைவரங்கள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டு



தீர்மானங்கள் எடுக்கப்படும் என கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

# ஓரிரு நாள்களுக்குள் இறுதித் தீர்மானம்



சட்டக்கல்லூரி மாணவர்கள் ஆங்கில மொழியில் மாத்திரம் பரீட்சைக்கு தோற்ற வேண்டும் என்ற விவகாரம் தொடர்பில் இறுதித் தீர்மானம் ஓரிரு நாள்களுக்குள் அறிவிக்கப்படும் என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றம் நேற்று வியாழக்கிழமை கூடிய நிலையில் சுயாதீன எதிர்க்கட்சி எம்.பியான விமல் வீரவன்ச முன்வைத்த சட்டக்கல்லூரி மாணவர்கள் தமது தாய்மொழியில் பரீட்சைக்கு தோற்றும் உரிமை மறுக்கப்பட்ட நிலையில், ஆங்கில மொழியில் மாத்திரம் பரீட்சைக்கு தோற்ற வேண்டும் என்ற தீர்மானம் பிரச்சினைக்குரியதாக உள்ளது.

ஆங்கில மொழியில் மாத்திரம் பரீட்சைக்கு தோற்ற முடியும் என்று வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தால், அந்த வர்த்தமானி அறிவித்தலுக்கு எதிராக வாக்களித்து அந்த தீர்மானத்தை இரத்து செய்ய முடியும். ஆனால் இதுவரை அந்த வர்த்தமானி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை. எனவே இது தொடர்பில் எடுக்கப்பட்டுள்ள தீர்மானம் என்னவென்று கேட்டார்.

சட்டக்கல்லூரி மாணவர்கள் ஆங்கில மொழியில் மாத்திரம் பரீட்சைக்கு தோற்ற வேண்டும் என்ற தீர்மானம் தொடர்பில் சட்ட ஆய்வு கவுன்சிலிடம் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்துள்ளோம்.

தொடர்ச்சி P2

# பைசருக்கு பதிலாக சினோபார்ம்

நாட்டில் பைசர் தடுப்பூசிகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள காரணத்தால், சினோபார்ம் தடுப்பூசியை நான்காம் தடுப்பூசியாக பயன்படுத்த இலங்கை சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று மீண்டும் பரவக்கூடிய அச்சுறுத்தல் இருக்கின்ற காரணத்தால், இதுவரை கொவிட் -19 தடுப்பூசியின் பூஸ்டர் டோஸ்களை பெறாதவர்கள் சினோபார்ம் தடுப்பூசிகளைப் பெறுமாறு சுகாதார அதிகாரிகள்




வலியுறுத்தியுள்ளனர்.

தற்போது இலங்கையில் 1.8 மில்லியன் சினோபார்ம் தடுப்பூசி டோஸ்கள் சுகாதார அமைச்சில் இருப்பதாக இலங்கை தொற்று நோயியல் பிரிவின் புதிய தலைமை தொற்று நோயியல் நிபுணர் வைத்தியர் சமித கினிகே தெரிவித்துள்ளார். இலங்கையில் 18 வயதுக்கு மேற்பட்டவர்களில் ஆறு மில்லியன் பேர் இதுவரை பூஸ்டர் தடுப்பூசிகளை பெறவில்லை என்று அவர் குறிப்பிட்டார்.

PAGE 1 தொடர்ச்சிகள்

பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயத்தில்

# தேவையான ஆவணங்களை விரைவாக பெற்று விசாரிக்கவும்

## டயானா வழக்கில் சீ.ஐ.டியினருக்கு உத்தரவு

உயர்ஸ்தானிகராலயத்திடம் இருந்து உரிய ஆவணங்களை பெற்றுக்கொண்ட பின்னர் உத்தரவுகளை பிறப்பிப்பது பொருத்தமாக இருக்கும் எனவும் அதுவரை சம்பந்தப்பட்ட நபரை கைது செய்து நீதிமன்றில் முற்படுத்துமாறு உத்தரவு பிறப்பிப்பது பொருத்தமானதல்ல எனவும் நீதவான் அறிவித்தார்.
டயானா கமகே இரட்டைக் குடியுரிமை அந்தஸ்து இல்லாமல் இலங்கையில் வசிக்கும் பிரித்தானியப் பிரஜை என்று சமூக ஆர்வலர் ஓஷல ஹேரத் 2021ஆம் ஆண்டு முறைப்பாடு செய்துள்ளார்.
குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகத்துக்கு பொய்யான தகவல்களை வழங்கி இலங்கை கடவுச்சீட்டை பெற்றுக்கொண்டதாக முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.
இந்த சம்பவம் தொடர்பில் சீ.ஐ.டியினர் விசாரணைகளை ஆரம்பித்ததுடன் பிரதான நீதவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.
இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே சீ.ஐ.டியினருக்கு மேற்குறிப்பிட்ட உத்தரவை பிறப்பித்த நீதவான், வழக்குடன் தொடர்புடைய உத்தரவுகளை பிறப்பிப்பதற்கு சட்டமா அதிபரின் ஆலோசனைகளை பெறவேண்டிய அவசியமில்லை எனவும் அறிவித்தார்.

உள்ளூராட்சிமன்றங்களை

# கலைக்கும் அதிகாரம் ஆணைக்குழுவுக்கு உள்ளது

பாராளுமன்றத்தின் நேற்றைய அமர்வில் கலந்துகொண்டு எதிர்க்கட்சி எம்.பி முஜிபூர் ரஹ்மானின் கேள்விக்கு பதிலளித்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஒழுங்குப் பிரச்சினை எழுப்பிய முஜிபூர் ரஹ்மான், உள்ளூராட்சி மன்றங்களுக்கான வேட்பு மனுக்கள் கோரப்பட்டுள்ளன. ஆனால் இதுவரையில் உள்ளூராட்சி மன்றங்கள் கலைக்கப்படவில்லை. உள்ளூராட்சி மன்றங்களின் ஆட்சி காலம் முடிவடையும் காலம் மார்ச் மாதம் 18ஆம் திகதியாகும். இதனால், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் சிலர் சபை உறுப்பினர்களாகவே போட்டியிடும் நிலை ஏற்படுகின்றது. இது அநீதியாகும் என்றார்.

மேலும், உள்ளூராட்சி மன்றங்கள் கலைக்கப்படாமல் இதுவரையில் தேர்தல் நடத்தப்படடதில்லை. எனவே இது தொடர்பில் உள்ளூராட்சி மன்றங்களுக்குப் பொறுப்பான அமைச்சரும் பிரதமருமான தினேஸ் குணவர்தனவின் நிலைப்பாடு என்ன எனவும் வினவினார்.

தேர்தல் ஆணைக்குழுவுக்கு உள்ள அதிகாரத்துக்கு அமைய, உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்காக வேட்புமனு தாக்கல் செய்வதற்கு திகதி தொடர்பான வர்த்தமானி வெளியிட்டிருக்கின்றது. இன்று முதல் (நேற்று ) அதற்காக கட்டுப்பணம் ஏற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன்

பின்னர் வேட்புமனு தாக்கல் செய்யப்படுகின்றது. இதன் நடைமுறைக்கு அமைய உள்ளூராட்சி மன்றங்களின் காலம் தொடர்பில் ஆணைக்குழுவே தீர்மானிக்கின்றது.

ஆனால், தற்போதுள்ள வர்த்தமானி அறிவிப்பின் பிரகாரம் அனைத்து உள்ளூராட்சி மன்றங்களின் ஆட்சிக்காலம் மார்ச் மாதம் 18ஆம் திகதியே முடிவடைகின்றது. அதனால் தேர்தல் ஆணைக்குழுவே அதுதொடர்பில் நடவடிக்கை எடுக்கவேண்டும். எனவே இதுதொடர்பில் யாரும் சந்தேகங்களை ஏற்படுத்திக்கொள்ள தேவையில்லை என்றார்.

# ஓரிரு நாள்களுக்குள் இறுதி தீர்மானம்

இறுதி தீர்மானம் இன்னும் ஓரிரு நாட்களுக்குள் அறிவிக்கப்படும் என நீதி,சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ பதிலளித்தார்.

ஜனாதிபதியின் காலக்கெடுவுக்குள் தீர்வின்றேல் தமிழ் மக்களை அணி திரட்டி

# போராட்டங்களில் குதிப்போம்

## கூட்டமைப்பு ஜனாதிபதிக்கு எச்சரிக்கை

அர்த்தமுள்ள அதிகாரப்பகிர்வே எமது கட்சியின் நிலைப்பாடு. அர்த்தமற்ற அதிகாரப் பகிர்வு எவருக்கும் தேவையில்லை. அர்த்தமற்ற அதிகாரப் பகிர்வு உண்மையில் அதிகாரப் பகிர்வாக இருக்காது. சமஸ்டி கட்டமைப்பில் மாத்திரமே அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வை வழங்க முடியும் எனவும் தெரிவித்தார்.

இவ்வாறு நாம் சொல்லிக்கொண்டிருக்கும் போதுதான் ஜனாதிபதி இதனை தீர்க்க முடியும் என தெரிவித்து காலக்கெடு ஒன்றையும் ஜனாதிபதியே அறிவித்துள்ளார். இந்த காலக்கெடுவுக்கு நாமும் இணங்கியிருக்கிறோம். தமிழர்களின் அரசியல் தீர்வு தொடர்பில் புதிதாக எதனையும் ஆரம்பிக்க வேண்டியதில்லை. 35 வருடங்களாக இது தொடர்பில் பேசப்பட்டு பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளதோடு, பல இணக்கப்பாடுகளும் எட்டப்பட்டுள்ளன. இவற்றை நடைமுறைப்படுத்த வேண்டியதை மாத்திரமே செய்ய வேண்டியிருக்கிறது எனவும் தெரிவித்தார். ஜனாதிபதி கூறியுள்ள காலக்கெடுவுக்குள் இப்பிரச்சினைக்கு தீர்வை வழங்க வேண்டும். தமிழ் மக்களின் நியாயமான அரசியல் அபிலாஷைகள் தீர்க்கப்பட வேண்டும். இதனை செய்யாது காலத்தைக் கடத்தும் செயற்பாடாக இது இருக்கக்கூடாது. நாமும் பல்வேறு சந்தேகங்களுடன் தான் பேச்சுவார்த்தைக்கு வருகிறோம். பல தடவைகள் இதுபோன்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன ஆனால் எதுவும் நடக்கவில்லை. பேச்சுவார்த்தைக்கு நாங்கள் வரவில்லை என்கிற பலிச்சொல் எமக்கு வரக்கூடாது என்பதாலேயே நாம் கலந்துரையாடலில் ஈடுபடுகிறோம்.

காலக்கெடுவுக்குள் இதனை செய்ய முடியாதென தெரிந்து ஜனாதிபதி எம்மை ஏமாற்றுவராக இருந்தால், நாட்டினதும் சர்வதேசத்தினதும் கண்களில் மண்ணைத் தூவும் செயற்பாடாக இது இருக்குமாக இருந்தால் அதனை உலகுக்கு அம்பலப்படுத்துவோம். இது மட்டுமல்ல நாட்டில் எங்களுடைய மக்களை அணி திரட்டி நியாயமான அரசியல் சுதந்திரத்துக்காக பல போராட்டங்களை முன்னெடுப்போம் எனவும் சுமந்திரன் எச்சரித்தார்.

# பேச்சுவார்த்தையில் எங்களையும் சேருங்கள்

## ஹக்கீம் கோரிக்கை

இனப் பிரச்சினைக்கு தீர்வை வழங்குவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுவார்த்தைகளை ஜனாதிபதி ஆரம்பித்துள்ளதை தான் வரவேற்பதாகவும், இது தொடர்பில் விசமத்தனமான பிரசாரங்கள் முஸ்லிம் மக்கள் மத்தியில் கொண்டு செல்லப்படுவது கவலைக்குரிய விடயம். இனப்பிரச்சினைக்கு தீர்வு குறித்து, தமிழ் மக்களின் அபிலாசைகள் என்பது சில சமயங்களில் முஸ்லிம்களின் அபிலாசைகளுடன் முரண்பட்ட விடயங்களாக இருக்கின்றபோது, தேவையற்ற சந்தேகங்களை குழப்பி ஒட்டுமொத்த இனப்பிச்சினைக்கான தீர்வு வருகின்ற சாத்தியப்பாட்டை குறைக்க முயற்சிக்கப்படுகின்ற விடயமாக உணர்கிறேன் எனவும் தெரிவித்தார். வடக்கு கிழக்கு பிரதேசத்தையும் ஒரு அரசியல் அலகாக ஆக்கித்தர வேண்டும் என்ற கோரிக்கை தமிழர் தரப்பிலே நீண்டகாலமாக தெரிவிக்கப்பட்ட விடயமாக இருக்கிறது. ஆனால் இந்த விடயத்தில் முஸ்லிம் தரப்பு சற்று மாறுப்பட்ட கருத்தை கொண்டிருக்கின்றது என்பதை தமிழ்

தரப்பு புரிந்துகொண்டிருக்கும் என நாங்கள் முழுமையாக உணர்ந்திருக்கின்றோம் எனவும் தெரிவித்தார். அந்த அடிப்படையிலே இந்த விவகாரத்திலே தேவையற்ற விஷமத்தனமான பிரசாரங்களை மேற்கொள்ளாமல், அரசாங்கமோ தமிழ் தரப்போ இந்த பேச்சுவார்த்தையை முன்னெடுக்கின்றபோது இந்த விவகாரத்தில் கரிசனை உடைய ஏனைய தரப்பினரையும் இணைத்துக்கொண்டு இதற்கான தீர்வுகளை காண்பார்கள் என்பதில் நாங்கள் நம்பிக்கையுடன் இருக்கின்றோம்.

# தேர்தலை நடத்த நாம் தடையல்ல

## சபைக்கு அறிவித்தது அரசாங்கம்

ஆளுங்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் பிரேமநாத் சி. தொலவத்தவால் தனிநபர் பிரேரணையாகக் கொண்டுவரப்பட்டுள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தல் தொடர்பான திருத்தச் சட்டமூலத்தை பாராளுமன்ற நிலையியற் கட்டளை 52/6 இன்படி பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதாக பிரதமர் தினேஸ் குணவர்தன சபைக்கு அறிவித்தார். இதன்போது சபைக்குத் தலைமை தாங்கிக்கொண்டிருந்த பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ, இந்த திருத்தச் சட்டமூலம் மீதான இரண்டாம் வாசிப்பு எப்போது என வினவினார். இதற்கு நாளை (06) என பிரதமர் பதிலளித்தார்.

உள்ளூராட்சி மன்றங்களுக்கான வேட்புமனுக்கள் சமர்ப்பிப்பதற்கான திகதிகளை தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ள நிலையில், உள்ளூராட்சி மன்ற தேர்தல் திருத்தச் சட்டமூலத்தை அரசாங்கம் இப்போது சமர்ப்பித்து தேர்தலைக் காலந்தாழ்த்தப்பார்ப்பதாக முயற்சிப்பதாக பிரதான எதிர்க்கட்சிகள் குற்றஞ்சுமத்தியதோடு, பிரதமர் தினேஸ் குணவர்தனவோடு கடும் வாக்குவாதத்திலும் ஈடுபட்டனர்.

இதற்குப் பதிலளித்த பிரேம்நாத் சி. தொலவத்த எம்.பி, தேர்தலை இலக்கு வைத்து நான் இத்திருத்தச் சட்டமூலத்தைக் கொண்டுவரவில்லை. எனது தேர்தல் விஞ்ஞாபனத்திலும் நான் இதனையே குறிப்பிட்டிருந்தேன். கடந்த ஏப்ரல் மாதம் முதல் இது தொடர்பில் பேசி வருகிறேன் எனவும் தெரிவித்தார். உள்ளூராட்சிமன்ற தேர்தல் தொடர்பில் யாரும் குழப்பமடையத் தேவையில்லை. அரசியலமைப்பின்படி திருத்தச் சட்டமூலம் ஒன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இது சட்டமாக அமல்ப்படுத்தப்படுவதற்கு குறைந்தது இரண்டரை மாதங்கள் செல்லும். தேர்தல் பணிகள் நடைபெற்று வருவதாகவும் தெரிவித்தார்.

ஈஸ்டர் ஞாயிறு விவகாரம்

# பிரதிவாதிகளுக்கு பிணை நிராகரிப்பு

நீதிபதிகளான தமித் தொட்டவத்த (தலைவர்), அமல் ரணராஜா மற்றும் நவரட்ன மாரசிங்க அடங்கிய குழாம் முன்னிலையில் பிரதிவாதிகள் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட பிணைக் கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட்டன.
அவர்களுக்கு பிணை வழங்குவது ஏற்புடையதல்ல என்பதால் பிணைக் கோரிக்கையை நிராகரிப்பதாக நீதிபதி தமித் தொட்டவத்த உத்தரவிட்டதுடன், வழக்கு விசாரணையை பெப்ரவரி 01 ஆம் திகதி எடுத்துக்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.
நௌபர் மௌலவி, சஜித் மௌலவி, மொஹமட் மில்ஹான், சாதிக் அப்துல்லா, ஆதம் லெப்பை, மொஹமட் சனாஸ்தீன் மற்றும் மொஹமட் ரிஸ்வான் உட்பட 25 பிரதிவாதிகளுக்கு எதிராக 13,270 குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.
பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட குற்றச்சாட்டுகளில் கொலைக்கு சதி செய்தல், உதவி செய்தல், ஆயுதங்கள் மற்றும் வெடிமருந்துகளை சேகரித்தல் மற்றும் கொலை முயற்சி ஆகியவை அடங்குகின்றன.
ஐஎஸ்ஐஎஸ் உடன் தொடர்புடைய உள்ளூர் இஸ்லாமிய தீவிரவாத அமைப்பான தேசிய தௌஹீத் ஜமாத்தைச் சேர்ந்த ஒன்பது தற்கொலை குண்டுதாரிகள், இலங்கையின் கத்தோலிக்க தேவாலயங்கள் மற்றும் நட்சத்திர ஹோட்டல்களை இலக்கு வைத்து 2019 ஏப்ரல் 21 ஈஸ்டர் தினத்தன்று நடத்திய தொடர் குண்டுவெடிப்பில் 270க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டதுடன், 500 க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வசந்தவுக்கு மீண்டும் விளக்கமறியல் நீடிப்பு

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள, பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான மாணவர் சம்மேளனத்தின் அழைப்பாளர் வசந்த முதலிகேவை எதிர்வரும் 13ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு கோட்டை நீதவான் திலின கமகே, வியாழக்கிழமை (05) உத்தரவிட்டார்.
நீதிமன்ற உத்தரவை மீறி செயற்பட்டமை மற்றும் பொலிஸாரின் கடமைகளுக்கு இடையூறு விளைவித்தமை ஆகிய குற்றச்சாட்டில் குறித்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
சந்தேகநபருக்கு பிணை வழங்குவது தொடர்பில் அடுத்த அமர்வில் பரிசீலிக்கப்படும் என்றும் நீதவான் உத்தரவிட்டார்.
இதேவேளை, வசந்த முதலிகேவை எதிர்வரும் ஜனவரி 17ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றம் கடந்த டிசெம்பர் 13ஆம் திகதி உத்தரவிட்டிருந்தது.
விசாரணைகளை துரித கதியில் பூர்த்தி செய்து நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினருக்கு மேலதிக நீதவான் உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# எரிவாயு விலையை குறைத்தது லிட்ரோ

அதற்கமைய, 4,610 ரூபாயாக இருந்த 12.5 கிலோ கிலோகிராம் சிலிண்டரின் விலை 201 ரூபாயால் குறைக்கப்பட்டு, 4,409 ரூபாயாக குறைவடைந்தது. 1,850 ரூபாயாக இருந்த 5 கிலோ கிராம் சிலிண்டரின் விலை 1,770 ரூபாயாகவும், 860 ரூபாயாக இருந்த 2.3 கிலோ கிராம் சிலிண்டரின் விலை 822 ரூபாயாகவும் குறைவடைந்துள்ளன.
ஒவ்வொரு மாதத்தின் 5ஆம் திகதியன்றும் லிட்ரோ நிறுவனத்தினால் எரிவாயு விலைகள் திருத்தப்பபடும் நிலையில், கடந்த நவம்பர் மற்றும் டிசெம்பர் மாதங்களில் எரிவாயு விலை அதிகரிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சரணடைந்த...

அனுப்பப்பட்டிருந்தது.

இறுதி யுத்த காலத்தில் இலங்கை இராணுவத்திடம் சரணடைந்த தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்பான தகவல்கள் தகவலறியும் உரிமைச் சட்டத்தின் கீழ், 2019.04.04 கோரப்பட்டிருந்தன.
எனினும், இலங்கை இராணுவத்திடம் புலிகள் எவரும் சரணடையவில்லை என இராணுவம் அப்போது பதில் வழங்கியிருந்தது.

இதற்கு எதிராக தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழுவில் 03.10.2019 அன்று மேன்முறையீடு செய்யப்பட்டிருந்தபோதிலும், மூன்று வருடங்களுக்குப் பின்னர் 03.11.2022 அன்று இந்த மேன்முறையீடு பரிசீலனைக்கு எடுத்துகொள்ளப்பட்டது.
இதன்போது தமிழீழ விடுதலை புலி உறுப்பினர் இலங்கை இராணுவத்திடம் சரணடைந்தமைக்கான எழுத்துமூல சமர்ப்பணம் ஒன்றை வழங்க வேண்டுமென ஆணைக்குழு ஊடகவியலாளர் நிரோஸ்குமாருக்கு உத்தரவிட்டிருந்ததோடு, இந்த எழுத்துமூல சமர்ப்பணத்துக்குப் பதில் எழுத்துமூல சமர்ப்பணத்தை 14 நாட்களுக்குள் வழங்க வேண்டுமென இராணுவத்துக்கும் உத்தரவிடப்பட்டிருந்தது.

இதன்படி, 01.12.2022 அன்று முன்னாள் போராளிகள் இராணுவத்திடம் சரணடைந்தமைக்கான பல்வேறு ஆதாரங்களைக் கொண்ட எழுத்துமூல சமர்ப்பணம் இராணுவத்துக்கு வழங்கப்பட்டிருந்தது.
இந்த எழுத்துமூல சமர்ப்பணத்துக்குப் பதில் எழுத்துமூல சமர்ப்பணத்தை 14 நாட்களுக்கு இலங்கை இராணுவம் வழங்க வேண்டும் என்கிறபோதிலும் 04.01.2023 அன்று வரையில் பதில் எழுத்துமூல சமர்ப்பணத்தை இராணுவம் வழங்கவில்லை.

இதேவேளை ஓய்வுபெற்ற நீதியரசர் உபாலி அபேவர்தன தலைமையிலான தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழு முன்பாக இந்த மேன்முறையீடு நேற்று முன்தினம் (04) பரிசீலனைக்கு எடுத்துகொள்ளப்பட்டது.
இதன்போது இராணுவத்தின் குறித்தளிக்கப்பட்ட அதிகாரி பிரிகேடியர் ஆர்.டி.ஏ.பதிரகே ZOOM ஊடாக ஆணைக்குழு முன்பாக ஆஜராகியிருந்தார்.

மேன்முறை யீட்டாளரால் வழங்கப்பட்டுள்ள எழுத்துமூல சமர்ப்பணத்துக்கு பதில் எழுத்துமூல சமர்ப்பணத்தை வழங்கும்போது, எம்மிடமிருக்கும் சாட்சிகள், எழுத்துமூலமாக எம்மிடமுள்ள சாட்சிகள், எத்தனைப் பேரை புனர்வாழ்வளித்திருக்கிறோம் என்பது தொடர்பான தகவல்களை வழங்க வேண்டியிருக்கிறது. இலங்கை இராணுவம் என்பது நாடுமுழுவதிலும் பரந்து விரிந்துள்ள ஒரு நிறுவனமாகும். எனவே பல்வேறு இடங்களில் இருந்து தகவல்களை பெற வேண்டியுள்ளது.

பல்வேறு தகவல்களை நாம் தற்போது பெற்றுக்கொண்டிருக்கிறோம் எனவும் தெரிவித்தார்.
தற்போது அறிக்கையை நாம் தயாரித்துகொண்டிருக்கிறோம்.
முழுமையான அறிக்கையை வழங்க வேண்டிய பொறுப்பு எமது இராணுவத்துக்கு உள்ளது.
அந்த பொறுப்பிலிருந்து பொறுப்பு வாய்ந்த இராணுவம் என்கிறரீதியில் நாம் விலகப்போவதில்லை.
எனவே இறுதி எழுத்துமூல சமர்ப்பணத்தை 17.01.2023ஆம் திகதிக்கு முன்னர் வழங்குவோம் என இராணுவம் தெரிவித்தது.

இதற்கு ஊடகவியலாளர் நிரோஸ்குமாரும், அவருக்கு சார்பாக ஆணைக்குழுவுக்கு வந்திருந்த ஊடகவியலாளர் தரிந்து ஜயவர்தன, மனித உரிமை செயற்பாட்டாளர் ருக்கி பெர்னாண்டோவும் கடும் எதிர்ப்பை தெரிவித்தனர். தமிழீழ விடுதலை புலிகள் இராணுவத்திடம் சரணடைந்த 14 வருடங்களாகின்றன.
இராணுவத்திடம் தங்களது உறவுகளை ஒப்படைத்திருந்தவர்களில் இப்போதுவரையில் சுமார் 150 இக்கும் மேற்பட்ட தாய்மார்கள் உயிரிழந்துள்ளனர். எனவே, இராணுவத்தினரிடம், சரணடைந்தவர்களின் தகவல்களை வழங்குவதற்குக் கால அவகாசம் கோருவதை ஏற்றுக்கொள்ள முடியாது என்றார்.

இதனை ஏற்றுக்கொண்ட உபாலி அபேரத்ன, தகவலறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் தகவல்களை வழங்குவதற்கு நீண்ட காலத்தை எடுத்துகொள்ள முடியாது. RTI சட்டத்தின்படி 2 மாதங்களுக்குள் முழு நடவடிக்கைகளும் நிறைவு செய்யப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.
இதேவேளை, சரணடைந்த தமிழீழ விடுதலை புலிகள் தொடர்பில் கேட்கப்பட்டுள்ள கேள்விகளுக்கு, இராணுவம் வழங்கும் அனைத்து தகவல்களையும் உள்ளடக்கிய பதில் எழுத்துமூல சமர்ப்பணத்தில் பதில் கிடைக்கும். பதில் வழங்குவதற்கு ஏற்பட்டுள்ள காலத்தாமதத்துக்கு கவலையடைவதாகவும் பிரிகேடியர் ஆணைக்குழுவுக்கு தெரிவித்தார்.

இதன்போது குறுக்கீடு செய்த உபாலி அபேவர்தன, அதாவது, இராணுவம் வழங்கும் பதில் எழுத்துமூல சமர்ப்பணத்தில் மேன்முறையீட்டாளரால் கேட்கப்பட்ட கேள்விகளுக்கான தகவல்கள் கிடைக்கும் என வினவினார். இதற்குப் பதிலளித்த பிரிகேடியர் ஆர்.டி.ஏ.பதிரகே, “ஆம், அனைத்து தகவல்களையும் வழங்குவோம்.“ என்றார்.
23.01.2022 அன்றுக்கு முன்னர் பதில் எழுத்துமூல சமர்ப்பணத்தை வழங்க வேண்டுமென தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழு உத்தரவிட்டதோடு, இந்த மேன்முறையீடு மீண்டும் 25.01.2023 அன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் எனவும் அறிவித்தது.



பா. நிரோஸ்
ddnirosh@gmail.com

# அதிகாரம் பகிரப்படுவதே எமது நிலைப்பாடு



அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும் என்கிற நிலைப்பாட்டிலேயே ஐக்கிய மக்கள் சக்தி இருப்பதாக தெரிவிக்கும் எதிர்க்கட்சியின் பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல, 13 பிளஸ்க்கு அப்பால் சென்று அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

20ஆவது திருத்தச் சட்டத்தைக் கொண்டு ஜனாதிபதியின் கீழ் அதிகாரங்களைக் குவித்தார்கள். 20ஆவது திருத்தச் சட்டத்தில் என்ன இருந்தது என்பது கூட எமக்கு தெரியாது. முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு நெருக்கமான சட்டத்தரணிகளே 20ஐ தயாரித்திருந்தனர் எனவும் தெரிவித்தார்.

அதுபோல துறைசார் மேற்பார்வைக் குழுக்களை சதி செய்து இல்லாதொழித்தார்கள். மேலும், ஆட்சியை நாம் ஒப்படைக்கும்போது நாம் விட்டுச்சென்ற கையிருப்பை 7800 மில்லியன் டொலர்களை இரண்டு வருடங்களில் வெறும் 20 மில்லியன் டொலர்களாக குறைத்திருதார்கள். நாம் பாராளுமன்றத்தில் உரையாற்றுவதைக்கூட கேட்காது அமைச்சர்கள் ஆசனங்களில் இருந்து எழுந்து செல்கிறார்கள். இது உண்மையில் வெட்கத்துக்குரியது எனவும் தெரிவித்தார்.

மாகாணசபைகள் நாட்டுக்கு வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு. ஆனால் தற்போது நாட்டில் மாகாணசபைகள் இல்லை என்பதால் ஆளுநர்களின் செயற்பாடுகளை பேச முடியாத நிலையே ஏற்பட்டுள்ளது. அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு. குறிப்பாக 13 பிளஸ்க்கு அப்பால் அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

## வெற்றிகரமான முடிவுகளை கண்டுள்ளோம்



நாட்டின் பொருளாதாரத்தை வலிமையான ஒன்றாக மாற்றுவதற்கு சர்வதேச அளவில் நடைபெற்ற விவாதங்கள், சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி மற்றும் நமக்கு ஆதரவான குழுக்களுடன், பல நாடுகள் குறிப்பாக இந்தியா, மற்றும் மக்கள் சீனாவுடனான பேச்சுக்கள் வெற்றிகரமான முடிவுகளைகொண்டு வந்துள்ளது. சாத்தியமான நடவடிக்கைக்கு நாங்கள் உறுதிபூண்டுள்ளோம். இதனை விரைவில் வெற்றிபெறச் செய்ய சகல தரப்பினரினதும் ஒத்துழைப்பை நாம் எதிர்பார்க்கின்றோம் என பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

உணவுப் பாதுகாப்பு மற்றும் கிராமியப் பொருளாதார மறுமலர்ச்சிக்கு முன்னுரிமை அளித்து ஏனைய சகல துறைகளினதும் முன்னேற்றத்துக்காக செயற்பட அனைவரும் தீவிரமாகச் செயற்படுவோம். மக்களின் வாழ்வாதாரத்தைப் பாதிக்கும் நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கான உத்திகள் தயாரிக்கப்படுவதுடன், புத்தாண்டில் மகத்தான தேசமாக எழுச்சிபெற நாட்டுமக்களின் நம்பிக்கையுடன் கைகோர்த்து செயற்படுமாறு அரசின் சார்பில் மீண்டும் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

கடந்த காலத்தில் ஏற்பட்ட நெருக்கடிகளின் ஊடாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் அரசு பொருளாதார ரீதியில், சமூக ரீதியாக சீர்குலைந்துள்ள நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப முன்னெடுத்துள்ள பல நடவடிக்கைகள்முன்னேற்றம் கண்டுள்ளன இதன் ஊடாகமக்களினதும், சர்வதேசத்தினதும் நம்பிக்கை கட்டியெழுப்பப்பட்டுள்ளது. வாழ்க்கைச் செலவுப் பிரச்சினைகள், வாழ்க்கைச் செலவு அதிகரிப்பால் ஏற்பட்டுள்ள சுமை போன்ற சவால்களிலிருந்து மீள்வதற்கு அரசு ஒன்றாகப் பிரச்சினைகளைக் கடந்து அனைவருக்கும் தீர்வுகளைக் காணும் எனவும் அவர் தெரிவித்தார்.

## போராட்டங்களுக்கு உயிர்கொடுங்கள்



நாட்டில் மீண்டும் போராட்டங்களுக்கு உயிர் கொடுக்க வேண்டுமென அழைப்பு விடுத்துள்ள பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, போராட்டங்கள் ஊடாகவே நாட்டின் அரசியல் கலாசாரத்தை மாற்றியமைக்க முடியும் எனவும் தெரிவித்தார். நாட்டின் புலனாய்வுப் பிரிவு மோசமாக உள்ளதாலேயே பிணை வழங்கிய 24 மணித்தியாலங்களுக்குள் கஞ்சிப்பானை இம்ரான் நாட்டை விட்டு தப்பியோடியுள்ளதாக பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா எம்.பி தெரிவித்தார்.

கந்தக்காடு புணர்வாழ்வு முகாமில் போதைப்பொருளுக்கு அடிமையானவர்களே புணர்வாழ்வுக்கு உட்படுத்தப்படுகிறார்கள். ஹெரோயினுக்கு அடிமையானவர்களே அதிகளவில் புணர்வாழ்வுக்கு உட்படுத்தப்பட்ட நிலையில் தற்போது ஐஸ் போதைப்பொருளுக்கு அடிமையானவர்களே புணர்வாழ்வுக்கு உட்படுத்தப்படுகிறார்கள். ஹெரோயினுக்கு அடிமையானவர்களை போல ஐஸ்க்கு அடிமையானவர்களே புணர்வாழ்வுக்கு உட்படுத்த முடியாது என கந்துக்காடு புணர்வாழ்வு மைய அதிகாரிகள் தெரிவிப்பதாகவும் கூறினார்.

மேலும், ஐஸ் போதைப்பொருள் ஹெரோயினை விட குறைவான விலைக்கு விற்பனை செய்யப்படுவதால் வேகமாக இளைஞர்கள் மத்தியில் பரவுவதாகவும் தெரிவித்தார். புலனாய்வுப் பிரிவுக்கு சலேவே பொறுப்பாக இருக்கிறார். இராணுவ புலனாய்வுப் பிரிவைப் பலப்படுத்துவதற்கு நான் நடவடிக்கைகளை மேற்கொண்டபோது சலேவை நான் ஒதுக்கி வைத்திருந்தேன் எனவும் தெரிவித்தார்.

## சிறந்த நிலையில் உள்ளவர்களும் சமுர்த்தி பெறுகின்றனர்

பொருளாதாரத்தில் சிறந்த நிலையில் உள்ள பலரும் சமுர்த்தி கொடுப்பனவுகளை பெற்று வருவது தெரிய வருகிறது. அரசின் நிவாரணம் வழங்கும் புதிய செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் போது முன்னர் நடைமுறையிலிருந்த பட்டியல் இரத்தாகும். அதேவேளை, நிவாரணங்களைப் பெற்றுக்கொள்ளும் காத்திருப்பு பட்டியலில் உள்ள அங்கவீனர்களுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என சமூக நலன்புரி இராஜாங்க அமைச்சர் அனுர பெஸ்குவல் தெரிவித்தார்.

அங்கவீனர்களுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். நாட்டில் 18 இலட்சம் பேர் சமுர்த்தி உதவியைப் பெற்று வருகின்றனர். அதில் சிறப்பாக வேலை செய்யக் கூடியவர்களும் உள்ளடங்குகின்றனர். அவ்வாறானவர்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்என்றார்.

வீடுகளை இழந்திருக்கிறோம்;

## ஒரு சதம் கூட கிடைக்கவில்லை



மே 09 வன்முறைச் சம்பவங்களால் வீடுகளை இழந்த பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இதுவரையில் அரசாங்கம் ஒரு சதம்கூட வழங்கவில்லை என கவலை தெரிவிக்கும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் கோகிலா குணவர்தன, நாங்கள் இந்நாட்டின் பிரஜைகள் இல்லையா? எனவும் கேள்வி எழுப்பினார்.

மே 9 வன்முறைச் சம்பவங்களால் நானும் எனது சகோதரனும் வீடுகளை இழந்துள்ளோம். எனது அப்பா, அம்மாவுக்கு தங்குவதற்கு இடமொன்று இல்லை. எனது சகோதரனுக்கும் இதே நிலைமைதான். இவ்வாறான நிலையில், மே 9ஆம் திகதி வீடுகளை இழந்துள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு 200 இலட்ச ரூபாயை அரசாங்கம் வழங்கியுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடி கூறியிருக்கிறார்.

எனக்கு பணம் வழங்கப்பட்டதா என எனது அம்மா, கணவர் கேட்கிறார்கள். இதனால் பெரும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்துள்ளேன். உண்மையில் எனக்கு ஒரு சதம் கூட அரசாங்கம் வழங்வில்லை. எனக்கு மட்டுமல்ல வீடுகளை இழந்த எம்.பிகள் எவருக்கும் அரசாங்கம் எதனையும் வழங்வில்லை எனவும் தெரிவித்தார். களுத்துறை, மினுவாங்கொடயில் இடம்பெற்ற கலவரங்களில் பாதிக்கப்பட்ட வீடுகளுக்கு அரசாங்கம் நட்டஈட்டை வழங்கியிருக்கிறது. ஆனால் எமக்கு இதுவரையில் எதனையும் வழங்கவில்லை எனவும் தெரிவித்தார்.

வேட்புமனு தயாரித்தல்

## கட்டமைப்பை முழுமையாக மாற்றியமைப்பது தவறு



உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலுக்கு வேட்புமனு தாக்கலுக்கான திகதி அறிவிக்கப்பட்ட நிலையில் வேட்புமனு தயாரித்தல் கட்டமைப்பை முழுமையாக மாற்றியமைக்கும் வகையில் பாராளுமன்றத்தில் 25 சதவீத இளைஞர் பிரதிநிதித்துவ திருத்தச் சட்டமூலம் கொண்டுவரப்பட்டு அதனை அமல்படுத்த அரசு கவனம் செலுத்துவது முற்றிலும் தவறு என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

உள்ளூராட்சிசபைகளுக்கான தேர்தலுக்கான வேட்புமனுத்தாக்கல் தொடர்பான உத்தியோகப்பூர்வ அறிவிப்பை தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு வெளியிட்டுள்ளது. தேர்தலுக்கான வைப்பு பணம் செலுத்தும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பெண் பிரதிநிதித்துவம் மற்றும் வழமையான நடைமுறைகளுக்கு அமைய வேட்பு மனு தயாரித்தல் பணிகளை அரசியல் கட்சிகள் முன்னெடுத்துள்ளன.

இவ்வாறான நிலையில் வேட்புமனு தயாரித்தல் கட்டமைப்பை முழுமையாக மாற்றியமைக்கும் வகையில் பாராளுமன்றத்தில் 25 சதவீத இளைஞர் பிரதிநிதித்துவ திருத்தச் சட்டமூலம் கொண்டுவரப்பட்டு அதனை அமல்படுத்த அவதானம் செலுத்தப்பட்டுள்ளமை முற்றிலும் தவறு.

இளைஞர் பிரதிநிதித்துவம் 25 சதவீதத்தினால் அதிகரிக்கப்பட வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்கிறோம், ஆனால் இந்த பிரேரணையை கொண்டு உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கு சிக்கலை ஏற்படுத்த முயற்சிப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. 25 சதவீத இளைஞர் பிரதிநிதித்துவம் தொடர்பான தனிப்பட்ட பிரேரணையை ஆளும் தரப்பின் உறுப்பினர் பிரேம்நாத் சி தொலவத்த கடந்த நவம்பர் மாதம் 2ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் தொலவத்த சமர்ப்பித்த தனிப்பட்ட பிரேரணை தொடர்பில் உள்ளூராட்சி சபைகள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சு அறிக்கை சமர்ப்பித்துள்ளது, ஆகவே அமைச்சு சமர்ப்பித்துள்ள அறிக்கை தொடர்பில் நீதிமன்றம் செல்ல முடியாது, ஆனால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட தனிப்பட்ட பிரேரணை தொடர்பில் நீதிமன்றம் செல்ல முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

## 1000 தேசிய பாடசாலைகளுக்கு ஆப்பு

1000 தேசிய பாடசாலைகளை அமைக்கும் வேலைத்திட்டத்தை இனியும் முன்கொண்டு செல்ல முடியாதென அறிவித்துள்ள கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, தகுதியற்ற பல பாடசாலைகள் தேசிய பாடசாலைகளாக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

நேற்றைய அமர்வில் கலந்துகொண்டு பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் மேலதிகக் கேள்விக்குப் பதிலளித்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். 30 - 60 இலட்ச ரூபாய் செலவிடப்பட்டு பல பாடசாலைகள் தேசிய பாடசாலைகளாக பிரகடனப்படுத்தப்பட்டிருந்த போதிலும் அவை தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ளன என்றார். இவ்வாறான நிலையில் 1000 தேசிய பாடசாலைகளை அமைக்கும் வேலைத்திட்டத்தை அரசாங்கம் தொடர்ந்து முன்னெடுக்குமா? அல்லது தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளதா? எனவும் வினவினார்.

இதற்குப் பதிலளித்த கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, 1000 தேசிய பாடசாலைகளை அமைக்கம் திட்டத்தை தொடர்ந்து முன்கொண்டு செல்ல முடியாது. அதற்கான நிதி இல்லை. மேலும், தேசிய பாடசாலைகளாக தகுதியற்ற பல பாடசாலைகள் உள்வாங்கப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. எனவே இத்திட்டத்தை முன்கொண்டு செல்ல முடியாததால் தற்காலிகமாக இத்திட்டத்தை இடைநிறுத்தியுள்ளதாக தெரிவித்தார்.

## சட்டமூலத்தை மீளப்பெறவில்லை விவாதமே பிற்போடப்பட்டுள்ளது

புனர்வாழ்வு பணியக சட்டமூலத்தை நாம் மீளப்பெற்றுக் கொள்ளவில்லை, சட்டமூலம் மீதான விவாதம் தான் பிற்போடப்பட்டுள்ளது புனர்வாழ்வு பணியக சட்டமூலத்தில் உள்ள ஒருசில சொற்பதங்களை நீக்குவதாக உயர்நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளோம் என நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார். புனர்வாழ்வு பணியக சட்டமூலம் இன்று, நேற்று ஆரம்பிக்கப்பட்டதல்ல, சபைக்கு சமர்ப்பித்துள்ள சட்டமூலத்தை நாம் மீளப் பெற்றுக் கொள்ளவில்லை, சட்டமூலத்தின் மீதான விவாதம் பிற்போடப்பட்டுள்ளது. 10 வருட காலத்திற்கு முன்னர் குழு அமைக்கப்பட்டு பரிந்துரைக்கப்பட்ட யோசனைகளை அப்படையாக கொண்டு இந்த சட்டமூலம் தயாரிக்கப்பட்டது என தெரிவித்தார்.

தலதா மாளிகை விவகாரம்

## விமர்சித்த நபருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்

தலதா மாளிகைக்கு அகௌரவத்தை ஏற்படுத்தும் வகையில் சமூக வலைத்தளங்களில் வீடியோ ஒன்றை வெளியிட்டிருந்த நபருக்கு எதிராக குற்றவியல் தண்டனைக் கோவைச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் என நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ சபைக்கு அறிவித்தார்.

பாராளுமன்றத்தின் நேற்றைய அமர்வில் கலந்துகொண்டு ஆளும் , எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மேற்கண்ட விடயம் தொடர்பில் முன்வைத்த விடயங்களுக்குப் பதிலளித்து உரையாற்றும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நேற்றைய சபை அமர்வில் கலந்துகொண்டிருந்த இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார, பௌத்த சாசனத்தை ஆட்சியில் உள்ள அரசாங்கம் பாதுகாக்க வேண்டும் என அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறான நிலையில், ஸ்ரீமஹா போதி, தலதா மாளிகைக்கு புலிகளால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டபோதுக்கூட கோபமடையாத சிங்கள மக்களை கோபமடையச் செய்யும் வகையில் மதச் சார்ப்பற்றவர்கள் அல்லது கட்சி சார்பற்றவர்கள் எனக்கூறிக்கொள்ளும் சிலர் செயற்படுகிறார்கள் என்றார்.

இது தொடர்பில் அரசாங்கம் அவதானம் செலுத்த வேண்டும் என்றார். இதற்குப் பதிலளித்த நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ, தலாதா மாளிகையை இலங்கையில் உள்ள பௌத்த மக்கள் மாத்திரமின்றி உலகில் உள்ள அனைத்து பௌத்தர்களும் வழிபடுகிறார்கள். எனவே தலதா மாளிகையை நிந்திக்க எவருக்கும் அதிகாரம் இல்லை. எனவே குறித்த நபருக்கு எதிரான குற்றவியல் தண்டனைக் கோவைச் சட்டத்தின் 290ஆம் பிரிவுக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

# அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளும் ஓரணியில் திரளவேண்டும்

## வடக்கு-கிழக்கில் பொதுமக்கள் போராட்டம்

■ கனகராசா சரவணன், வி.ரி சகாதேவராஜா, நிதர்சன் வினோத், தீஷான் அஹமட்

ஐக்கிய இலங்கைக்குள் ஒருங்கிணைந்த வடக்கு - கிழக்கு மாகாணத்துக்கு மீளப் பெற முடியாத சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வை வலியுறுத்துவதற்கு அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளும் ஒரணியில் திரளவேண்டும் என கோரி, வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நேற்று (05) பொது மக்கள் ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்பு குழு, போராட்டத்துக்கு அழைப்பு விடுத்ததையடுத்து, பொது மக்கள் ஒன்று திரண்டு போராடினர்.

வடக்கு கிழக்கு மாகாணங்கள் மீள் ஒருங்கிணைக்கப்பட்டு வடகிழக்கு தனியொரு மாகாண அலகாக உருவாக்கப்பட வேண்டும். ஒருங்கிணைந்த வடகிழக்கு மாகாண அலகின் ஆட்சியானது, மக்களால் ஜனநாயகமான தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் சபையால் மேற்கொள்ளப்படவேண்டும் எனவும் போராட்டத்தின் போது வலியுறுத்தப்பட்டது.




மட்டக்களப்பு:

மட்டக்களப்பு காந்தி பூங்காவில், நேற்று முதல் 10ஆம் திகதிவரை தொடர் போராட்டத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

திருக்கோவில்:

திருக்கோவில் ஆதார வைத்தியசாலை முன்பாக போராட்டம் காலை 10 மணி முதல் 11.30 மணி வரை நடைபெற்றது.

போராட்டத்தில் அம்பாறை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கவிந்திரன் கோடீஸ்வரன், திருக்கோவில் பிரதேச சபை தவிசாளர் இ.வி. கமலராஜன், காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில், மாணவர் மீட்பு குழு தலைவர் செல்வராஜா கணேஷ் உள்ளிட்ட அரசியல் தலைவர்கள் உட்பட சிவில் அமைப்புகள், பாதிக்கப்பட்ட மக்கள், ஊடகவியலாளர்கள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள் என்று பலரும் கலந்து கொண்டார்கள்.







திருகோணமலை:

முற்றவெளி முன்பகுதியில் இடம்பெற்ற போராட்டத்தில் இளைஞர்கள், சமூக அமைப்பின் பிரதிநிதிகள், பெண்கள் என பலரும் பங்குபற்றியிருந்தனர்.

யாழ்ப்பாணம்:

ஏ9 வீதியின் நாவற்குழி சந்தியில் போராட்டகாரர்கள் ஒன்றுகூடியிருந்தனர்.

# சோளம் அறுவடை வைபவம்

■ ஹஸ்பர்

திருகோணமலை, பாலம்போட்டாறு பத்தினிபுரம் பகுதியில் சோளம் அறுவடை நிகழ்வு நேற்று முன்தினம் (04) நடைபெற்றது.

'சௌபாக்கியா' திட்டத்தின் கீழ், குறித்த பிரதேசத்தை தரிசு நிலங்களாக மாறவிடாமல், பயிர்ச் செய்கையின் ஊடாக விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் இப்பணி இடம்பெற்றது. நிகழ்வில், தம்பலகாமம் பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர்



இரா. பிரசாந்தன், நிர்வாக உத்தியோகத்தர் உடகெதர, பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் நிகாத், விவசாய போதனாசிரியர் எனப் பலர் கலந்து கொண்டனர்.



### கோணேஸ்வரா இந்துக் கல்லூரியின் நடைபவனி...

திருகோணமலை இ. கி. ச. ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியின் 125ஆவது ஆண்டு விழாவுக்கான நடைபவனி நேற்று (05) கல்லூரியில் இருந்து ஆரம்பமாகி, பிரதான வீதியின் ஊடாக வலம் வந்தது.

தமிழர் பண்பாட்டு விழுமியங்களைக் காட்சிப்படுத்தும் அம்சங்கள் இடம்பெற்றிருந்த இந்த நடைபவனிக்கு, கல்லூரி அதிபர் செ. பத்மசீலன் தலைமை தாக்கியதுடன் கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா ஜகம்பத், திருகோணமலை நகர சபைத் தவிசாளர் நா. இராசநாயகம் உட்பட பலர் கலந்து சிறப்பித்தனர்.

அ. அச்சுதன்

# மலாக்கா ஆளுநர் கல்முனை மாநகருக்கு விஜயம்



■ பாறுக் ஷிஹான்

மலேசியாவின் மலாக்கா மாநில ஆளுநர் துன் முஹமட் அலி ருஸ்தாம் நேற்று முன்தினம் (04) மாலை, கல்முனை மாநகர சபைக்கு விஜயம் செய்திருந்தார். இதன்போது, கல்முனை மாநகர மேயர் ஏ.எம் றகீப் தலைமையில் உறுப்பினர்கள், அதிகாரிகளால் வரவேற்பளிக்கப்பட்டதுடன் இரு தரப்பு புரிந்துணர்வு தொடர்பிலான கலந்துரையாடலும் இடம்பெற்றது.

மலாக்கா ஆளுநருடன் மலேசிய பல்கலைக்கழக உபவேந்தர் போராசிரியர் அப்துர் ரஸ்ஸாக் பின் இப்றாஹிம், மலேசிய இஸ்லாமிய சர்வதேச செயலகத்தின் இலங்கைக்கான ஒருங்கிணைப்பாளர் கலாநிதி ஏ.எம் ஜெமீல் உட்பட மலேசிய உயர்ஸ்தானிகராலய அதிகாரிகளும் வருகை தந்திருந்தனர்.

இதன்போது, மலாக்கா ஆளுநரின் கல்முனை விஜயத்துக்கு மதிப்பளித்து, மேயரால் நினைவுச் சின்னம் வழங்கப்பட்டதுடன் மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம் அஸ்மியால் பொன்னாடை போர்த்தியும் கௌரவிக்கப்பட்டார்.

# மாணவர்களுக்கு இலவச மூக்குக் கண்ணாடி

■ நூருள் ஹுதா உமர்

அம்பாறை மாவட்ட அரச சார்பற்ற நிறுவனமான 'நிந்தவூர் பெஸ்ட் ஒப் யங்' 'மாணவர் மகிமை' வேலை திட்டத்தின் கீழ், தேவையுடைய மாணவர்களுக்கு இலவச மூக்குக் கண்ணாடிகளை நேற்று (05) வழங்கிவைத்தது.

'நிந்தவூர் பெஸ்ட் ஒப் யங்' சமூக சேவைகள் அமைப்பின் தலைவர் ஐ.எம் நிஸ்மி தலைமையில் நிந்தவூர் அல் அஷ்ரக் கனிஷ்ட பாடசாலை மாணவ, மாணவியர்களுக்கு மூக்கு கண்ணாடிகள் இலவசமாக




வழங்கி வைக்கப்பட்டன

இந்த நிகழ்வில், நிந்தவூர் கோட்டக் கல்வி பணிப்பாளர் எம். சரிபுத்தீன், பாடசாலை அதிபர் எம். ஹபீபுல்லாஹ், பெஸ்ட் ஒப் யங் அமைப்பின் செயலாளர் ஏ புஹாது ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

மாலதி பரசுராமன் விவசாய திணைக்களத்தின்

# பணிப்பாளர் நாயகமாக நியமனம்



■ கே.எல்.ரி யுதாஜித்

விவசாய திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாக, மட்டக்களப்பு ஆரையம்பதியை சேர்ந்த மாலதி பரசுராமன் நியமிக்கப்பட்டுள்ளார். இந்தப் பதவிக்கு முதன்முதலாக நியமிக்கப்பட்ட தமிழ் பெண்ணாக மாலதி பரசுராமன் வரலாற்றில் இடம்பிடித்துள்ளார்.

விவசாய அமைச்சின் விவசாய தொழில்நுட்ப பிரிவின் மேலதிக செயலாளராக கடமையாற்றிய இவர், 'கன்னோருவ A9' ரகம், 'HOB-2' எனப்படும் போஞ்சி மரபணு ஆராய்ச்சி, புதிய கலப்பின கறிமிளகாயான 'பிரார்த்தனா' போன்ற பல ஆராய்ச்சிகளை மேற்கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்கு ஏற்றவகையில்

# இளைஞர் யுவதிகளுக்கு தொழிற்பயிற்சி

■ சண்முகம் தவசீலன்

கல்வி பொதுத் தராதர சாதாரண தர பரீட்சையில் தேர்ச்சியடையத் தவறிய இளைஞர் யுவதிகளுக்கு, தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையால் (NATIA) தொழிற்பயிற்சி வழங்கும் தேசிய வேலைத்திட்டத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு செவ்வாய்க்கிழமை (03) முல்லைத்தீவு மாவட்ட செயலக பண்டாரவன்னியன் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

மாவட்ட முகாமையாளர் சி. சிவகௌரி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக மாவட்ட செயலாளர் க.விமலநாதன், சிறப்பு விருந்தினராக மாவட்ட விவசாய பயிற்சி நிலைய பண்ணை முகாமையாளர் கே. கீர்த்திகன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.






இந்நிகழ்வில், புதிய பயிற்சித் திட்டத்தில் கள உதவியாளர் (விவசாயம்), நீர்க்குழாய் பொருத்துநர், மின்னியல் வல்லுநர், பராமரிப்பாளர் (குழந்தை மற்றும் முதியோர்), வாகன சேவையாளர், உள்ளக சுத்திகரிப்பாளர் ஆகிய பிரதான 05 துறைகளில் தலா 25 பேர் விகிதம் சேர்த்துக்கொள்ளப்பட்டு பயிற்சி நெறிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன. இந்தப் பயிற்சிகளானது, வெளிநாட்டு வேலைவாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கப்பல் சேவை மூலம்

# வடமாகாணத்தை முன்னேற்ற முடியும்

**யாழ்ப்பாண வர்த்தகர்கள், இந்தியாவில் இருந்து காங்கேசன்துறை வழியாக வர்த்தக நடவடிக்கையில் ஈடுபடலாம். இந்தச் சந்தர்ப்பத்தை தயவுசெய்து ஒவ்வொருவரும் பயன்படுத்துங்கள் கொள்ளுங்கள்**

■ நிதர்சன் வினோத்

கப்பல் சேவை மூலம் வடமாகாண பொருளாதாரத்தை முன்னேறக் கூடிய சாத்தியம் இருப்பதாக யாழ்ப்பாணம் வணிகர் கழகம் தலைவர் இரத்தினலிங்கம் ஜெயசேகரன் தெரிவித்தார். நேற்று (05) யாழ். வணிகர் கழகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; இந்தியாவுக்கும் காங்கேசன்துறைக்கும் இடையிலான 'காகோ சிப்' கப்பல் சேவை ஜனவரி மாதம் இறுதியில் ஆரம்பிக்கப்படும். நீண்டகாலமாக வணிகர் கழகம் இக் 'காகோ சிப்' கப்பல் சேவையை கேட்டதன் தொடர்சியாக, இந்திய - இலங்கை அரசாங்கங்கள் தற்போது இணங்கி, இந்தச் சேவையை முன்னெடுக்கவுள்ளன. இதன்மூலம், யாழ்ப்பாண வர்த்தகர்கள், இந்தியாவில் இருந்து காங்கேசன்துறை வழியாக வர்த்தக நடவடிக்கையில் ஈடுபடலாம். இந்தச் சந்தர்ப்பத்தை தயவுசெய்து ஒவ்வொருவரும் பயன்படுத்தி கொள்ளுங்கள் என்றும் வேண்டுகோள்விடுத்தார்.

இந்திய ரூபாயில் இறக்குமதிகள் செய்வது தொடர்பாக, வங்கி அதிகாரிகளுடன் அரசு அதிகாரியுடன் தொடர்பு கொண்டுள்ளதாகத் தெரிவித்தார்.

குறைந்தளவு சேதன பசளை கொள்வனவு

# 415 மில்லியன் ரூபாய் மீதம்

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

கிளிநொச்சி மாவட்டத்தில் குறைந்தளவு சேதன பசளையை கொள்வனவு செய்து, ஹெக்டேயர் ஒன்றுக்கு ரூபாய் 12,500 வீதம் 29,000 ஹெக்டேருக்கும் 415 மில்லியன் ரூபாயை மீதப்படுத்திய அனைத்து விவசாயிகளுக்கும் கமநல அபிவிருத்தி திணைக்களம் நன்றிகளைத் தெரிவித்துள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் 19,000 விவசாயிகள் 29,000 ஹெக்டேயர் நிலப்பரப்பில் காலபோக நெற்பயிர்ச் செய்கையை மேற்கொண்டு வருகின்றனர்.

அரசாங்கத்தின் கொள்கைத் திட்டத்துக்கு அமைவாக, ஒரு ஹெக்டேயருக்கு ரூபாய் 20,000 பெறுமதியான சேதனப் பசளையைக் கொள்வனவு செய்ய முடியும். ஆயினும், கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள விவசாயிகள் ஒரு ஹெக்டேயருக்கு ரூபாய் 7,500 பெறுமதியான சேதனப் பசளையையே கொள்வனவு செய்துள்ளனர். இதன்மூலம், 415 மில்லியன் ரூபாயை மீதப்படுத்தி நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவியுள்ளனர் என கமநல அபிவிருத்தி திணைக்களம் தெரிவித்துள்ளது.

# ஆசிரியரின் வீட்டில் திருட்டு; பணிப்பெண் கைது

■ க. அகரன்

வவுனியா - மன்னார் வீதி, இரண்டாம் கட்டைப்பகுதியிலுள்ள ஆசிரியரின் வீட்டில் தங்க நகைகள், பணம் என்பன திருட்டு போயுள்ளதாக நெளுக்குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கணவன், மனைவி இருவரும் ஆசிரியர்களாக சேவையாற்றி வரும் இவர்களின் வீட்டில், சில தினங்களுக்கு முன்னர், சங்கிலி, தோடு, பணம் என்பன திருட்டுப்போயுள்ளது. இதனடிப்படையில் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார், அவ்வீட்டில் பணியாற்றிய சிதம்பரபுரம் பகுதியை சேர்ந்த வீட்டுப் பணிப்பெண்ணை கைது செய்து விசாரணைகளை மேற்கொண்டபோது, திருடப்பட்ட நகை, பணம் என்பன கண்டு பிடிக்கப்பட்டன.

# வீதியை செப்பனிட்டு கட்டடத்தை திற

## வலப்பனை பிரதேச மக்கள் ஆர்ப்பாட்டம்

■ ஆ.ரமேஸ்

பிரதேச மக்கள் தினமும் பயணிக்கும் பிரதான வீதியை செப்பனிட்ட பின்னர், புதிதாக அமைக்கப்பட்டுள்ள குடிநீர் விநியோக கட்டடத்தை திறக்குமாறு வலியுறுத்தி, வலப்பனை பிரதேசத்தைச் சேர்ந்த பல கிராமங்களைச் சேர்ந்த மக்கள் நேற்று (05) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதற்கமைய, தெரிப்பெய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொட்டம்ப, வெலிகெட்டிய, உடுகம, திக்கல, உஸ்பனாஎல்ல, மெதிகந்த ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் திக்கல வீதியை மறித்து எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

திக்கல பிரதேசத்தில் சுமார் 800 குடும்பங்களுக்கு வலப்பனை பிரதேச செயலகத்தின் ஊடாக, தனியார் நிறுவனம் ஒன்று பல கோடி ரூபாய் செலவில் குடிநீர் விநியோகத்துக்கான கட்டடமொன்றை திறந்து வைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

இந்தத் திட்டம் கடந்த நான்கு வருடங்களுக்கு முன் ஆரம்பிக்கப்பட்ட நிலையில், பிரதேச மக்கள் பயன்படுத்தும் பிரதான வீதியில் கனரக வாகனங்கள் ஊடாக திட்ட பணிகளுக்கான பொருட்கள் கொண்டு செல்லப்பட்டதால் வீதி பாவனைக்கு உதவாத வகையில் மேலும் சேதமடைந்துள்ளது.

இத் திட்டத்தை முன்னெடுத்த நிறுவனம், இக்கட்டடத் திறப்பு விழாவுக்கு முன், பழுதடைந்த வீதியை புனரமைத்து தருவதாக வழங்கிய வாக்குறுதியை மீறி, வீதியை புனரமைக்காது திறப்பு விழாவை நடத்த முற்பட்டதால் தாம் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டதாக தெரிவித்தனர்.



# மவுசாக்கலையில் மிதந்த சடலம் மீட்பு

■ செ.தி.பெருமாள்

மவுசாக்கலை நீர்த்தேக்கத்திலிருந்து ஆணொருவரின் சடலமொன்று மீட்கப்பட்டுள்ளது.

நீர்த்தேக்கத்தில் சடலம் மிதப்பதைக் கண்ட மஸ்கெலியா- கிராப்பு தோட்டத் தொழிலாளர்கள் இது குறித்து மஸ்கெலியா பொலிஸ் நிலையத்துக்கு அறிவித்துள்ளனர்.

இதையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த மஸ்கெலியா பொலிஸார், மிதந்து கொண்டிருந்த 35 அல்லது 40 வயது மதிக்கத்தக்க ஆண் ஒருவரின் சடலத்தை மீட்டு, பிரேத பரிசோதனைக்காக கிளங்கன் ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு சென்றுள்ளனர்.



உடலின் பல இடங்களில் காயங்கள் காணப்படுவதுடன், சடலம் இதுவரை அடையாளம் காணப்படவில்லை என்றும் தெரிவித்த பொலிஸார், சம்பவம் தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக தெரிவித்தனர்.

### 15 வருடங்களாக மூடப்படிருக்கும்

# இரண்டு தொழிற்சாலைகள்

■ எஸ்.ஆராச்சி

மக்கள் தோட்ட அபிவிருத்தி சபைக்குரிய யட்டியாந்தோட்டை - நாகஸ்தென மற்றும் சுந்தலோயா ஆகிய தோட்டங்களின் தேயிலைத் தொழிற்சாலைகள் கடந்த 15 வருடங்களாக மூடிக் கிடப்பதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.



தற்போது குறித்த தொழிற்சாலைகள் இரண்டும் முழுமையாக பழுதடைந்து, மீண்டும் தொழிற்பட முடியாத நிலையில் காணப்படுவதாகவும் தோட்ட மக்கள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் குறித்த தோட்டத்தைச் சேர்ந்த பெரும்பாலான மக்கள் தற்போது பெருந்தோட்டத் தொழிலை கைவிட்டுள்ளதுடன், தேயிலைத் தோட்டங்களும் காடுகளாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### "வீடுகளை முழுயாக பூரணப்படுத்தி தரவும்"

# அப்பகிரேன்லி தோட்ட மக்கள் கோரிக்கை

■ துவாரகுமான்

லிந்துலை - அப்பகிரேன்லி தோட்டத்தில் வீடுகள் இல்லாத 30 குடும்பங்களுக்கு 2017 ஆம் ஆண்டு அரசாங்கத்தால் தனி வீட்டு திட்டத்தின் கீழ் வீடுகள் அமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டு, பூர்த்தி செய்யப்படாமல் இடைநடுவில் கைவிடப்பட்டுள்ளது.



குறித்த 30 வீடுகளுக்கும் யன்னல், கதவு, மலசல கூடம், குடிநீர், பாதை, மின்சாரம் உள்ளிட்ட பல்வேறு குறைபாடுகளுடன் கைவிடப்பட்டுள்ளதாக பயனாளிகள் தெரிவிக்கின்றனர்.

எனினும், பல குறைபாடுகள் காணப்பட்டாலும் ஏழு குடும்பங்கள் எவ்வித அடிப்படை வசதிகளும் அற்ற நிலையில் அந்த வீடுகளில் குடியேறியுள்ளனர்.

வீடுகளில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்து, தமக்கு வாழ்வதற்கான வழியை அரசாங்கம் செய்து கொடுக்க வேண்டும் என பயனாளிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# "கஞ்சிபானை வெளியே வசந்த முதலிகே உள்ளே"

## இதுதான் ஜனாதிபதி ரணில் ஆட்சியின் அற்புதம் என்கிறார் இராதா எம்.பி

■ டி.ஷங்கீதன்

இன்று இலங்கையில் நடைபெறுகின்ற செயற்பாடுகள் அனைத்தும் முன்னுக்குப் பின் முரணாகவே அமைந்துள்ளன என தெரிவித்த நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வேலுசாமி இராதாகிருஸ்ணன், மக்களின் நலனுக்காகப் போராடிய வசந்த முதலிகே, சிறையில் அடைக்கப்பட்டு தண்டனை அனுபவித்து வருகின்றார். ஆனால், கஞ்சிபானை இம்ரான் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார் என்றார்.

இவ்வாறு பிணையில் விடுதலை செய்யப்பட்ட அவர், நாட்டை விட்டு தப்பியோடிய விடயத்தை பெரும் செய்தியாக்கி இருக்கின்றார்கள். அப்படியானால் எங்களுடைய பொலிஸும் புலனாய்வு பிரிவினரும் என்ன செய்கின்றார்கள் என்ற கேள்வி மக்கள் மத்தியில் எழுகின்றது என்றார்.

நாட்டின் பல பகுதிகளிலும் மக்கள் உண்ண உணவின்றி தவித்துக் கொண்டிருக்கின்றார்கள். பாடசாலை சிறுவர்கள் உணவின்மையால் பாடசாலைக்கு வரமுடியாத ஒரு நிலைமை ஏற்பட்டுள்ளது. இதனை கண்டு கொள்ளாத ஆட்சியாளர்களும் அரசாங்கமும் மீண்டும் அமைச்சர்களையும் ஆளுநர்களையும் நியமிப்பதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கின்றது.

மின்சார விலையை எவ்வாறு அதிகரிப்பது, பொருட்களின் விலைகளை எவ்வாறு அதிகரிப்பது, வரியை எவ்வாறு அதிகரிப்பது என மக்களுக்கு சுமையை அதிகரிக்கின்ற வேலைத்திட்டத்தை முன்னெடுப்பதற்கு முக்கியத்துவம் கொடுக்கின்றது.

ஆனால், இந்த மக்களின் துயரங்களை துடைப்பதற்கு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதற்கான முயற்சியும் இல்லை. விசேடமாக பெருந்தோட்ட தொழிலாளர்களின் நிலைமை மிகவும் மோசமாக இருக்கின்றது. இதற்கான எந்தவிதமான செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படவில்லை என்றார்.

# அடிக்கல் நாட்டப்பட்டது

இராமகிருஷ்ண மிஷனால் கொட்டகலை ஹெரிங்டன் 'பி' பிரிவில் சிவானந்த நலன்புரி நிலையம் ஒன்றினை அமைப்பதற்காக 2 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது. அதில் அடிக்கல் நாட்டப்பட்டது. (பி. கேதீஸ்)







# மக்கள் உயிர்வாழ்வதற்கான திட்டங்களே முக்கியம்

■ எஸ்.கணேசன்

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள சூழ்நிலையில் அபிவிருத்தியைவிடவும் மக்கள் உயிர்வாழ்வதற்கு அவசியமான வேலைத்திட்டங்களுக்கே முக்கியத்துவமும், முன்னுரிமையும் வழங்கப்பட வேண்டும். அதற்கமையவே கொட்டகலை சுகாதார பிரிவில் சத்துணவு வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என கொட்டகலை பிரதேச சபையின் தவிசாளரும், இ.தொ.காவின் இளைஞர் அணி தலைவருமான ராஜமணி பிரசாந்த் தெரிவித்தார்.

கொட்டகலை பிரதேச சபை நிர்வாக எல்லையில் 280 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருள்களை நேற்று (05) வழங்கி வைத்த போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.




தொடர்ந்து தெரிவித்த அவர், நுவரெலியா மாவட்டத்தில் மந்தபோசனை பிரச்சினை பல வருடங்களாகவே இருந்துவருகின்றது. எனினும், நாட்டின் ஏனைய பகுதிகளிலும் தற்போது மந்தபோசனை பிரச்சினை ஏற்பட்டுள்ளதாலேயே, தற்போது நுவரெலியா பற்றியும் கதைக்கப்படுகின்றது. அப்படியாவது பேசுகின்றனரே என மகிழ்ச்சியடைய வேண்டியதுதான்.

இதற்கமைய, கொட்டகலை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் சிறார்கள் மத்தியில் நிலவும் மந்தபோசனை பிரச்சினைக்குத் தீர்வை வழங்க திட்டமிட்டோம். சத்துணவை வழங்குவதற்காக பாதீட்டில் 25 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. நுவரெலியா மாவட்டத்தில் ஏனைய பகுதிகளிலும் இதுபோன்ற வேலைத்திட்டம் கட்டாயம் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்றார்.

# கழிவு ட்ரெக்டர் டயர் கழன்று விபத்து

■ ரஞ்சித் ராஜபக்ஷ

நோர்வூட் பிரதேச சபையின் கழிவுகளை ஏற்றிச் செல்லும் ட்ரெக்டர் விபத்துக்குள்ளானதில் சாரதி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நோர்வூட் பிரதேச சபை அலுவலகத்திலிருந்து பொகவந்தலாவை நகரை நோக்கி நேற்று (05) காலை சென்று கொண்டிருந்த ட்ரெக்டரின் முன்பக்க டயர்கள் கழன்று சென்றதால் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொகவந்தலாவை பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் காயமடைந்த சாரதி டிக்கோயா- கிளங்கன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

### பராமரிப்பற்ற வீதியால்

# சிறுதேயிலைத் தோட்ட உரிமையாளர்கள் பாதிப்பு

■ மஹேஸ் கீர்த்திரத்ன

மாத்தளையிலிருந்து பிரிதெவல பட்டஹிரவத்தைக்குச் செல்லும் வீதி மிகவும் சேதமடைந்துள்ளதால் தேயிலை கொழுந்தை கொண்டு செல்ல முடியாமல் பாரிய சிரமத்தை எதிர்கொள்வதாக குறித்த பிரதேசத்திலுள்ள சிறுதோட்ட உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.



மாதிவெல, விகாடன் தோட்டம் பட்டஹிர தோட்டங்களில் 200 ஏக்கரில் தேயிலை பயிரிடப்பட்டுள்ளதுடன். மாதாந்தம் குறித்த தோட்டங்களிலிருந்து 2,000 கிலோ கிராம் தேயிலை கொழுந்து மாத்தளையை அண்மித்த பகுதிகளிலுள்ள தொழிற்சாலைகளுக்குக் கொண்டு செல்லப்படுகின்றன.

சிறிய லொறி, ஒட்டோ என்பவற்றிலேயே தேயிலைக் கொழுந்து கொண்டு செல்லப்படும் நிலையில், வீதி சேதமடைந்துள்ளதால் அவற்றைக் கொண்டு செல்வதில் சிக்கல் நிலை காணப்படுவதாக மாத்தளை மாவட்ட சிறுதேயிலைத் தோட்ட உரிமையாளர் சங்கத்தின் ஏற்பாட்டாளர் காமினி ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

மழைக் காலங்களில் வீதியிலுள்ள கற்கள், மண் கழுவிச் செல்லப்படுவதாகவும் உக்குவெல, யடவத்தை, மாத்தளை பிரதேச செயலகப் பிரிவுகளை எல்லையாகக் கொண்ட வீதி என்பதாலும் இந்த வீதியின் பராமரிப்பு அல்லது அபிவிருத்தி தொடர்பான திணைக்களங்கள் நடவடிக்கை எடுப்பதாகத் தெரியவில்லை எனவும் காமினி ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

கடந்த சில நாள்களாக பெய்து வரும் கடும் மழையால் தார் பெருமளவில் அடித்துச் செல்லப்பட்டதாகவும், மண்சரிவு காரணமாக வீதி பாரியளவில் சேதமடைந்துள்ளதாகவும் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

மாத்தளை நகரிலுள்ள பாடசாலைகளுக்கு இப்பிரதேசத்தின் பல கிராமங்களில் இருந்து 50 இற்கும் மேற்பட்ட பாடசாலை மாணவர்கள் செல்வதாகவும் முறையான போக்குவரத்து வசதிகள் இல்லாத காரணத்தால் பிள்ளைகள் பாடசாலைக்கு செல்கின்றமை குறைவடைந்து வருவதாகவும் தெரிவித்தார்.

தேசிய பொருளாதாரத்துக்கு பெரும் பங்களிப்பை வழங்கும் சிறு தேயிலை தோட்ட உரிமையாளர்களை பாதுகாப்பது அதிகாரிகளின் கடமை எனவும், இவ்விடயம் தொடர்பில் உரிய கவனம் செலுத்தி, வீதியை சீர் செய்யுமாறும் சிறு தேயிலை தோட்ட உரிமையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

### ஹட்டன் இ.போ.ச டிப்போவில்

# சாரதி, நடத்துநர்களுக்கு வெற்றிடங்கள்

## உரிய சேவையை முன்னெடுப்பதில் சிக்கல்

■ சதஸ்க்ஸ்வ்ஹேவா

ஹட்டன் இ.போ.ச பஸ் டிப்போவில் பஸ் நடத்துநர்கள், சாரதிகளுக்கான வெற்றிடம் காணப்படுவதாகவும் இதனால் போக்குவரத்து சேவையை உரியமுறையில் முன்னெடுப்பதில் சிக்கல் காணப்படுவதாகவும் பணியிலிருக்கும் சாரதிகளும் நடத்துநர்களும் தெரிவிக்கின்றனர்.

டிப்போவில் நடத்துநர்கள், சாரதிகளுக்கு பாரிய வெற்றிடங்கள் காணப்படுவதால், கடமையிலிருக்கும் சாரதிகள், நடத்துநர்களுக்கு விடுமுறை எடுப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

இதற்கமைய, 90 பஸ்கள் காணப்படும் ஹட்டன் டிப்போவில் 27 சாரதிகளுக்கும் 25 நடத்துநர்களுக்கும் வெற்றிடங்கள் காணப்படுவதாகவும் இதனால் பஸ்களை உரியமுறையில் சேவையில் ஈடுபடுத்த முடியாமல் இருப்பதாகவும் தெரிவிக்கின்றனர்.

சிவனொளிபாதமலை யாத்திரை ஆரம்பிக்கப்பட்டுள்ள குறித்த காலப்பகுதியில் சாரதி, நடத்துநர்களுக்கு வெற்றிடங்கள் காணப்பட்டாலும் ஹட்டன் டிப்போ அதிகம் வருமானம் ஈட்டி வருவதாகவும் வெற்றிடங்கள் நிரப்பப்பட்டு, அனைத்து பஸ்களும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டால் மேலும் அதிகமான வருமானத்தைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

# ஆணையை சுரண்டிப் பார்க்க ஒரு தருணம் கிடைத்துள்ளது

ஆட்சியில் இருக்கும் அரசாங்கம், தமது பலத்தை சுரண்டிப் பார்ப்பதற்கு முன்னர், தமக்கேற்ற சுற்றுவட்டத்தை ஏற்படுத்திக்கொண்டு, தேர்தலுக்குச் செல்லும். எதிர்பார்த்ததைப் போல மக்கள் ஆணை கிடைக்காவிடின், அடுத்தடுத்த தேர்தல்களுக்குச் செல்வதை காலந்தாழ்த்திவிடும்.

மற்றுமொரு புறத்தில் பார்த்தோமெனில், அரசாங்கத்தின் மீதான மக்களின் செல்வாக்கு உச்சம் தொட்டிருக்கும் நேரத்தில், மக்கள் மனங்கவர் வாக்குறுதிகளை அள்ளிவீசி, தேர்தலுக்குச் சென்று தமது பலத்தை நிரூபித்து காட்டிவிட்டு, பதவிக்காலம் நிறைவடையும் வரையிலும் தனது போக்கிலேயே சென்றுகொண்டிருக்கும்.

உள்ளூராட்சிமன்ற தேர்தலில் மட்டுமே சுரண்டிப் பார்க்கமுடியும். மாகாண, பாராளுமன்ற தேர்தல்களில் மக்களின் செல்வாக்கே, முக்கிய இடத்தை பிடித்திருக்கும். ஆக, சுரண்டிப் பார்ப்பதற்கான சந்தர்ப்பமொன்று கிடைத்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையிலான இந்த அரசாங்கம் தேர்தலுக்குச் செல்லவேண்டிய தருணமல்ல. எனினும், பதவிக்காலம் நிறைவடைந்ததன் பின்னர், தேர்தல் ஆணைக்குழு தேர்தலை நடத்தியே ஆகவேண்டும். அதனால்தான், உள்ளூராட்சி மன்றங்களுக்கான வேட்பு மனு கோரப்பட்டுள்ளது.

24 மாநகரம், 41 நகரம், 276 பிரதேச சபைகள் உள்ளடங்களாக 341 உள்ளூராட்சி சபைகளுக்கு, ஜனவரி 18ஆம் திகதியிலிருந்து 21ஆம் திகதி நண்பகல் 12 மணி வரை வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படவுள்ளன. இதற்கிடையில், உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கு இடைக்கால தடையுத்தரவை பிறப்பிக்குமாறு கோரி, உயர்நீதிமன்றத்தில் ரிட் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நடத்தினால், அரிசியை கொள்வனவுச் செய்யமுடியாத நிலைமை ஏற்படுமென ஆளும் தரப்பைச் சேர்ந்த முக்கியஸ்தர்கள் பகிரங்கமாக தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், நாட்டை கட்டியெழுப்புவதற்கான அதிகாரங்களே தன்னிடம் வழங்கப்பட்டுள்ளன. ஆகையால், எந்தவொரு கட்சிக்கும் ஆதரவளிக்கமாட்டேன் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பகிரங்கமாக அறிவித்துவிட்டார். உள்ளூராட்சிமன்ற தேர்தல் தொடர்பிலான ஆலோசனைகளை சட்டமா அதிபரிடம் அரசாங்கம் கோரியும் உள்ளது. ஒரு சில கட்சிகளைப் பொறுத்தவரையில், வேட்புமனுக்களைத் தயார் செய்வதற்கான ஏற்பாடுகளையும் வேட்பாளர்கள் தெரிவையும் மும்முரமாக முடுக்கிவிட்டுள்ளன. எனினும், உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பே சகலவற்றையும் தீர்மானிக்கும். உள்ளூராட்சி மன்றங்களில் உறுப்பினர்கள் எண்ணிக்கை அதிகமாகும். அவற்றை குறைப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பாராளுமன்றத்தில் வைத்து அறிவித்திருந்தார். எனினும், அதுதொடர்பில் சகலருமே மௌனம் காத்துக்கொண்டிருக்கின்றனர்.

உள்ளூராட்சிமன்ற தேர்தல் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொண்டதன் பின்னர், தேர்தலுக்குச் சென்றிருந்தால், உறுப்பினர்களின் எண்ணிக்கை கணிசமான அளவு குறைந்திருக்கும். தெரிவுக்குப் பின்னரான செலவுகளையும் குறைத்து இருக்கலாம். எனினும், சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்கான ஆர்வத்தை பாராளுமன்றம் காண்பிக்கவில்லை.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் மூலமாகவே தமக்கான நேரடி பிரதிநிதியை மக்கள் தேர்ந்தெடுத்து கொள்வர். அதற்கான ஜனநாயக உரிமையும் ஆணையை சுரண்டிப் பார்க்க தருணமும் கிடைத்துள்ளது.




## தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



## வாழ்வியல் தரிசனம்

நெஞ்சத்தில் களங்கத்துடன் வாழ்பவர்கள், தங்களுக்கு ஏதாவது துன்பங்கள் வந்துற்றால், தவறுகள் நேர்ந்துவிட்டால் அதை, தமக்குப் பிடிக்காதவர்களே காரணம் என வீண்பழியைச் சுமத்திவிடுகின்றார்கள்.

பழி சுமத்துவதால் எதுவும் நடப்பதில்லை. ஆனால், இத்தகையவர்கள் தமக்குத் தாங்களே வலிந்து ஊறுவிளைவிப்பவர்களாகி விடுகின்றார்கள்.

எவரதும் நிம்மதியைக் குலைப்பது பாவமாகும். ஒருவருக்கு இன்னொருவரிடம் முரண்பாடுகள் இருந்தால், அதைப் பேசி இணக்கப்பாட்டை ஏற்படுத்தலாம்.

தவறுகளை ஏற்றுக்கொள்ளாமல் அநேகர், வீண்பிடிவாதத்துடன் நீதிக்கு மாறாகவே வாழ்ந்து, தம்மைத்தாமே வருத்திக் கொள்கின்றார்கள்.

எந்தப் பிரச்சினை இருந்தாலும், அதைக் கண்டுகொள்ளாமல் பிறருக்கு உதவுபவனே முழுமனிதன். நல்ல காரியங்கள் செய்வதால், எந்த இடர்களும் எமக்குத் தெரியாமலேயே கழன்று விடுகின்றன.

எதைச் சாதித்தீர்கள் என உங்களை நீங்களே கேட்பீர்களாக! தவறுகளை ஏற்றுக்கொண்டு திருந்துபவன் களிப்படைகின்றான்.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

வலதுசாரி தீவிரவாதத்தின் நிழலில் – 09:

# உலக அரங்கு 2023: அதிவலதின் எழுச்சிக்கு வழியமைக்குமா?



தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

புதிய ஆண்டு நம்பிக்கையுடன் பிறக்கிறது. 2022ஆம் ஆண்டில், உலகெங்கிலும் உள்ள பொருளாதாரங்கள் அதிர்ச்சியடையும் வகையில் சேதமடைந்தன. பெரும் வல்லரசுகளுக்கு இடையே (அமெரிக்கா, சீனா, ஐரோப்பிய ஒன்றியம்), உலக முதலாளித்துவம் சில காலமாக மோதல்களை உருவாக்கி வருகிறது, ஏனெனில், இவற்றுக்கு இடையிலான உறவு முறிந்துள்ளது.

அமெரிக்க முதலாளித்துவமும் அதன் பேரரசும் வீழ்ச்சியடைந்து வருவது, இன்னும் வெளிப்படையாகத் தெரிகிறது. ஓர் அமெரிக்க நட்பு நாடாக ஐரோப்பாவின் பங்கானது, அதன் பொருளாதார எதிர்காலம் குறித்த நிச்சயமின்மையால் அபாயகரமானதாக மாறியது.

சீனாவின் பொருளாதார வளர்ச்சி, சிக்கல்களை எதிர்கொண்டுள்ளது. ரஷ்யாவுடனான சீனாவின் ஆழமான கூட்டணியும் அதன் வளர்ந்து வரும் உலகளாவிய பொருளாதாரமும், அமெரிக்காவில் பலரை பயமுறுத்தியது. பல ஆண்டுகளாக அதிகரித்து வரும் ஆக்ரோஷமான போட்டி, வர்த்தகப் போர்கள், தடைகள், மானியங்கள் ஆகியவை பெரும்பாலும் அமெரிக்காவால் தொடங்கப்பட்டவை. கடந்த ஆண்டு உலகப் பொருளாதாரப் போர் உச்சத்தை எட்டியது.

ரஷ்யாவுக்கும் உக்ரேனுக்கும் இடையிலான போர், இதற்கான முக்கியமான காரணமல்ல; உக்ரேனிய மக்களினதும் மோதலின் இரு தரப்பிலும் உள்ள வீரர்களின் பாரிய துன்பங்களைத் தவிர, இது இரண்டாம்நிலை விவகாரம்.

இந்த ஆண்டின் முக்கிய உண்மை என்னவென்றால், அமெரிக்காவுக்கும் ஐரோப்பிய ஒன்றியத்துக்கும் ரஷ்யாவுக்கும் சீனாவுக்கும் இடையிலான பொருளாதாரப் போர், தடைகள், எதிர்த்தடைகள் என்பனவாகும். இவற்றின் துணை விளைவுகள் (ஆற்றல் விலை உயர்வுகள், விநியோகச் சங்கிலித் தடைகள், பாரிய சந்தை மாற்றங்கள்), ஏற்கெனவே பல நாடுகளைத் தொந்தரவு செய்யும் பணவீக்கத்தை மோசமாக்கின.

இவை, மத்திய வங்கிகளின் வட்டி விகித அதிகரிப்பைத் தூண்டிவிட்டன. இது ஏற்கெனவே சிக்கலான 2022ஆம் ஆண்டின் உலகப் பொருளாதாரத்துக்கு அதிக இடையூறுகளையும் அதிர்ச்சிகளையும் கொண்டுவந்து சேர்த்தது.

பல தசாப்தங்களாக, செல்வமும் வருமானமும் மேல்நோக்கி மறுபகிர்வு செய்யப்பட்டுள்ளன. அந்த மறுபங்கீட்டினால் பாதிக்கப்பட்ட தொழிலாள வர்க்கங்களின் குறைந்தபட்ச எதிர்ப்புடன் இது தொடர்ந்து அதிகரித்தது.

2022ஆம் ஆண்டில், பல நாடுகளில் உள்ள உழைக்கும் வர்க்கங்கள், அந்த மறுபங்கீட்டின் பின்னணியில் தங்கள் தேவைகளை ஒத்திவைக்க தயாராக இல்லை. தொழிலாளர் போர்க்குணம், தொழிற்சங்கமயமாக்கல், வேலைநிறுத்தங்கள் அனைத்தும் குறிப்பிடத்தக்க ஆற்றல் மற்றும் உற்சாகத்துடன் புதுப்பிக்கப்பட்டுள்ளன.

தற்கால முதலாளித்துவத்தின் ஆழமடைந்துவரும் ஏற்றத்தாழ்வுகள், உறுதியற்ற தன்மைகள், நீண்ட காலமாக மந்தமான மத்திய-இடது மற்றும் மத்திய-வலது அரசாங்கங்களும் கட்சிகளும் அநீதிகளைப் போக்குவதற்கு எதையும் செய்யுமா என்பதைப் பொறுத்திருந்து பார்க்க, தொழிலாளர்கள் தயாராக இல்லை.

முதலாளித்துவத்தால் பாதிக்கப்பட்டவர்கள் பெருகியுள்ள நிலையில், அவர்கள் ஒரு பொதுநோக்கத்துக்கான கூட்டணியை மீண்டும் தொடங்கியுள்ளனர். பூகோள அரசியலில் 'குளோபல் சவுத்' என்று தவறுதலாக அழைக்கப்படுகின்ற மூன்றாமுலக நாடுகள், ஒரு முக்கிய பங்காளியாக உருவாகியுள்ளன. பழைய முதலாளித்துவ உலகம், சிதைந்து கொண்டிருக்கிறது என்ற பரவலான உணர்வுகளும் தீவிரமடைந்துள்ளன. இவ்விரண்டையும் அனுமதிக்க மேற்குலகம் தயாராக இல்லை.

பாரிய முரண்பாடுகளின் போது, இரண்டுவிதமான உணர்வுகள் மக்களிடமிருந்து வெளிவருகின்றன. ஒன்றில் அது வெள்ளை மேலாதிக்கம், நிறவெறி, அதிவலதுக்கான கட்டற்ற ஆதரவு அல்லது பாசிச எதிர்ப்பு. மற்றையதில், தொழிலாளர் ஆதரவு, இடதுசாரிக் கொள்கைகளுக்கான வரவேற்பு போன்றவையாகும். இவை இரண்டையும் கடந்தாண்டு கண்டோம்.

ஒருபுறம் ஜேர்மனியில், இத்தாலியில், பிரான்ஸில் என அதிகரித்துள்ள அதிவலதின் செல்வாக்கு. மறுபுறம் பிரித்தானியாவில், சீனாவில் என உலகெங்கும் நியாயமான ஊதியம், வேலை நிலைமைகளைக் கோருகின்ற தொழிலாளர் போராட்டங்கள்.

இன்று முதலாளித்துவம், தங்கள் நெருக்கடியைச் சமாளிக்க மறைமுகமான அதிவலது ஆதரவைக் கையில் எடுக்கிறார்கள். அதன்மூலம், முதலாளித்துவங்கள் மீண்டும் தேசியவாதத்தில் தங்களை மறைத்துக் கொள்கின்றன. அதிவலது ஒருபுறம் தேசியவாத உசுப்பேத்தல்களுக்குப் பயன்படுகிறது. மறுபுறம், தொழிலாளர் போராட்டங்களை வன்முறையுடன் அடக்க உதவுகிறது.

இங்கு மூன்று போக்குகள் நோக்கப்பட வேண்டும்:

உக்ரேனிய சுயநிர்ணயம் என்பதன் பெயரால், நேட்டோ விரிவாக்கத்துக்கான பணிகள் நடக்கின்றன. உக்ரேனுக்கான அமெரிக்க ஆதரவு ஆயுத வியாபாரம், நீண்டகாலநோக்கில் உக்ரேனிய விளைநிலங்களைக் கைப்பற்றுதல், அமெரிக்க எரிவாயுவை, ரஷ்ய எரிவாயுவுக்கு பதிலீடாக்குதல் ஆகியவற்றை நோக்காகக் கொண்டது.

சீனாவின் எழுச்சியை எதிர்கொள்ள அமெரிக்க முதலாளித்துவம், புதிய தாராளமய உலகமயமாக்கலில் இருந்து அரசாங்கத்தின் தலைமையிலான பொருளாதார தேசியவாதத்துக்கு மாறியது. இதற்குத் 'தேசிய பாதுகாப்பு' என்ற கவசத்தை இடுகிறது. இதன்மூலம், தேவைக்கேற்ப முதலாளித்துவ வரையறைகள் மீண்டும் எழுதப்படுகின்றன.

ஐரோப்பாவின் ஒற்றுமையின் முறிவு, அதிகரித்துள்ள முரண்பாடுகளும் ஓர் அரசியல்-பொருளாதாரக் கூட்டமைப்பாக, ஐரோப்பிய ஒன்றியத்தின் எதிர்காலத்தைக் கேள்விக்குறியாக்கி உள்ளன. இவ்வொன்றியம் வலுவிழப்பது அமெரிக்க நலன்களுக்கு வாய்ப்பானது. பொதுவான வர்த்த உடன்படிக்கையால், அமெரிக்கா இழப்பது அதிகம். இதுவே, தனித்தனியானதாக இருக்கும் போது, அமெரிக்கா தன் அதிகாரத்தைப் பயன்படுத்தி தனக்கு வாய்ப்பான வகையில் வர்த்தகம் செய்யவியலும்.

ஐரோப்பிய ஒன்றியம் அதற்குத் தடையாகவுள்ளது. இவ்வொன்றியத்துக்கு மாற்றாக அமெரிக்க-ஐரோப்பிய ஒன்றிய-நேட்டோ கூட்டணி என்ற பெயரில் நேட்டோ கூட்டணியாக, ஐரோப்பிய ஒன்றியத்தை மாற்ற அமெரிக்கா முனைகிறது. அதனூடு அதற்கான தலைமைப் பதவியை அமெரிக்கா தக்கவைக்கவியலும். இதனூடு சரிகின்ற தன் பேரரசைக் காப்பாற்ற அமெரிக்கா முயல்கிறது.

உலக முதலாளித்துவம், இந்தப் புதிய நூற்றாண்டில் ஏற்கெனவே மூன்று முறை மோசமாகத் தடுமாறியிருக்கிறது. 2000இல் 'டொட்-கொம்' நெருக்கடி, 2008இல் 'சப்பிரைம் அடமான' நெருக்கடி, 2020இல் கொவிட்-19 நெருக்கடி என்பவையாகும்.

இந்த ஒவ்வொரு நெருக்கடியையும், வெவ்வேறு, ஒத்திசைவான பெயரால் அழைப்பதானது, ஒரு சுழற்சியை மெல்லியதாக மறைக்கிறது. ஆனால் மேலும் மேலும் மூன்றாமுலக நாடுகளைச் சுரண்டுவதன் மூலம், இந்நெருக்கடி தொடர்ச்சியாக ஆழமடைந்து வந்துள்ளது. இதன் பின்புலத்திலேயே, அதிவலதின் எதிர்காலம் குறித்து நோக்க வேண்டியுள்ளது.

2022இன் நிகழ்வுகள், அதிவலது செல்வாக்குப் பெற்று வருகிறது என்பதை உறுதிபடக் காட்டியுள்ளன. மேற்கு ஐரோப்பாவில் 2010இல் இருந்து பொதுவான போக்கு வலதுசாரி வன்முறை மெதுமெதுவாக அதிகரித்து வருவதை உறுதிசெய்துள்ளது. என்றாலும், தாக்குதல் எண்ணிக்கைகள், இலக்கு மற்றும் குற்றவாளி சுயவிவரங்கள் என்று வரும்போது தனிப்பட்ட நாடுகளுக்கு இடையே பெரிய வேறுபாடுகள் உள்ளன.

முழுமையான எண்ணிக்கையில், இங்கிலாந்து, இத்தாலி, கிரீஸ், ஸ்பெயின் ஆகியவற்றைத் தொடர்ந்து அதிக எண்ணிக்கையிலான தாக்குதல்களுடன் ஜெர்மனி தனித்து நிற்கிறது. மக்கள்தொகை அளவை ஒப்பிடும் போது, கிரீஸ் மற்ற எந்த நாட்டையும் விட அதிகமாக உள்ளது. அதே நேரத்தில் ஜெர்மனி இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளது. மேலும், குறைந்த அளவிலான வன்முறைகள் நிகழ்ந்துள்ளபோதிலும், மூன்று நோர்டிக் நாடுகளான ஸ்வீடன், நோர்வே, பின்லாந்து ஆகியவையும் ஒப்பீட்டளவில் உயர்ந்த இடத்தில் உள்ளன.

இந்த அதிகரிப்பை கடந்த ஒரு தசாப்தகாலமாக அதிகரித்து வந்துள்ள சமூகப் பொருளாதார அசமத்துவங்களுடனும் அதிவலது வன்முறையைக் தடுப்பதில் அரசுகளின் அலட்சியத்துடனும் சேர்த்து நோக்க வேண்டும்.

அதிகார மையங்களுக்குள் அதிவலதுக்குக் கணிசமான ஆதரவு உண்டு என்பதை கடந்தாண்டு நிகழ்வுகள் காட்டியுள்ளன. எனவே, இவ்வாண்டு அதிகரிக்கும் பொருளாதார நெருக்கடி, இச்சக்திகளுக்கு மேலும் ஊக்கத்தை அளிக்கும்.

வடக்கு, தெற்கு ஐரோப்பா இடையே அதிவலது வன்முறைகளில் தெளிவான வேறுபாடு உள்ளன. வடக்கு ஐரோப்பாவில் பெரும்பான்மையான தாக்குதல்கள் இன மற்றும் மத சிறுபான்மையினரை குறிவைத்தன. இத்தாலி, கிரீஸ், ஸ்பெயின் போன்ற தென் ஐரோப்பிய நாடுகளில், அரசியல் எதிரிகள் - குறிப்பாக, பாசிஸ்டுகளுக்கு எதிரானவர்கள் - தீவிர வலதுசாரிகளால் தாக்கப்படுபவர்களில் மிகப் பெரிய பங்கைக் கொண்டுள்ளனர். மேலும் ஒழுங்கமைப்பட்ட அதிவலது வன்முறை இன்று அதிகரித்துள்ளது.

இவை தெளிவான செய்தியொன்றைத் தருகின்றன. நாடுகள் மிகப்பாரிய பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்குகின்றன. அதற்கான தீர்வை இவர்கள் பின்பற்றுகின்ற முதலாளித்துவத்தால் தர இயலாது. எனவே தேசியவாதத்தைக் கையிலெடுக்கிறார்கள். அதற்கு அதிவலதைத் துணைக்கழைக்கிறார்கள்.

பழி, ஒருபுறம் குடியேற்றவாசிகள் மீதும்; மறுபுறம் இடதுசாரிகள், தொழிற்சங்கவாதிகள், முற்போக்காளர்கள் மீதும் விழுகிறது. இவர்கள் அனைவரின் மீதும் அரச துணையோடு அதிவலது தாக்குதல் தொடுக்கிறது. இதன் இன்னொரு வடிவமே, இலங்கை போன்ற நாடுகளில் அரங்கேறுகின்றது.

## கடிதங்கள்

### பஸ்ஸுக்காக நீண்டநேரம் காத்திருக்கும் மாணவர்கள்



கிளிநொச்சி, பூநகரி நகரத்தில் பஸ்ஸுக்காக மாணவர்கள் நீண்ட நேரம் காத்திருக்கும் அவலம் தீர்வின்றித் தொடர்கின்றது.

பூநகரி மகாவித்தியாலயத்தில் பயிலும் மாணவர்களே, இவ்வாறு நீண்ட நேரமாக, வீடு செல்வதற்காக பஸ்ஸுக்காகக் காத்து நிற்கின்றனர். பூநகரி மகாவித்தியாலயத்துக்கு காலை வேளையில் பாடசாலைக்கு வருகை தந்தாலும், பிற்பகல் 3.30 மணிக்கு பின்னரே பஸ்கள் வருகை தருவதன் காரணமாக, பூநகரி நகரத்தில் மாணவர்கள் வீதியில் பஸ்ஸுக்காக் காத்து நிற்க வேண்டிய நிலைமை காணப்படுகின்றது.

பூநகரி பிரதேச செயலகத்தில் நடைபெற்ற கூட்டங்களில், பாடசாலை விட்டவுடன் தமது பிள்ளைகள் வீடுகளுக்கு திரும்பக் கூடிய வகையில் பஸ் சேவைகள் இடம்பெற வேண்டும் என, பெற்றோர் தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்துவரும் நிலையிலும், மாணவர்களின் போக்குவரத்து நேரத்தில் பஸ்கள் பணியில் ஈடுபடாததன் காரணமாக, மாணவர்கள் வீடு திரும்புவதில் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

கௌதாரிமுனை, வினாசியோடை, பள்ளிக்குடா, செம்மங்குன்று உட்பட பல கிராமங்களின் மாணவர்கள், பூநகரி சந்தியில் காத்து நிற்கின்றனர். மாணவர்கள் வீடு திரும்பக் கூடிய வகையில், பஸ் சேவைகள் இடம்பெற வேண்டும் என்பதே பெற்றோர்களின் கோரிக்கையாக உள்ளது.

–நடராசா கிருஸ்ணகுமார்

மத்திய பிரதேசம்

# “பாலியல் இன்பத்தை இழந்துவிட்டேன்;

## ஆறு கோடி ரூபாய் இழப்பீடு வேண்டும்”

மத்திய பிரதேசம், ரத்லமில்லைச் சேர்ந்தவர் காந்தீலால். 35 வயதான அவரும், அவரது நண்பரும், வேலை வாங்கித்தருவதாக ஆசை வார்த்தை கூறித் தன்னைக் கூட்டு பாலியல் வன்கொடுமை செய்ததாகப் பெண்ணொருவர், 2018 ஆம் ஆண்டு பொலிஸ் நிலையத்தில் புகார் அளித்திருந்தார்.



இப்புகாரின் அடிப்படையில், தலைமறைவாக இருந்த காந்தீலாலையும் அவரது நண்பரையும் 2020 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் பொலிஸார் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

இதனிடையே, கைது செய்யப்பட்டவர்கள் மீதான வழக்கு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது.

இவ்வழக்கில் காந்தீலால் மற்றும் அவரது நண்பர் மீதான குற்றங்களை அரசு தரப்பினரால் நிரூபிக்க முடியாமல் போனதால், 666 நாள்கள் சிறைவாசத்தின் பின்னர் இருவரும் விடுவிக்கப்பட்டனர்.

இந்நிலையில், தன் மீது போடப்பட்ட போலி வழக்கினால் சுமார் 2 ஆண்டுகள் சிறை தண்டனை அனுபவிக்க நேரிட்டதாகவும், இதனால் தனக்கு மத்தியபிரதேச அரசு ஆறு கோடி ரூபாய் நஷ்ட ஈடு வழங்க வேண்டும் என்றும் காந்தீலால் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார்.

குறித்த மனுவில் மேலும் “2 ஆண்டுகளாக எதிர்கொண்ட துன்பங்களை விவரிக்க முடியாது. சிறையில் நான் சந்தித்த சோதனைகளால் சிறையில் இருந்து வெளியே வந்தபின்னும் தோள் தொடர்பான நோய், நிரந்தர தலைவலி உட்பட பல நோய்களை சந்தித்தேன்.

6 பேர் கொண்ட என் குடும்பத்தில் நான் மாத்திரம் தான் பணம் ஈட்டுபவன். போலி குற்றச்சாட்டுகளால் என் வாழ்க்கை பாழாகிவிட்டது. மேலும், ‘மனிதனுக்கு கடவுள் கொடுத்த பரிசான பாலியல் இன்பத்தையும் இதனால் அனுபவிக்க முடியாமல் போனது. எனவே தொழில் மற்றும் வேலை இழப்பு, நற்பெயர் இழப்பு, உடல் மற்றும் மனம் சார்ந்த வலி, குடும்ப வாழ்க்கை இழப்பு, கல்வி வாய்ப்பு இழப்பு, வாழ்க்கையில் முன்னேற்றம் இழப்பு ஆகிய காரணங்களுக்காக தலா 1 கோடி ரூபாய் என மொத்தம் 6 கோடி ரூபாய் இழப்பீடு வழங்க வேண்டும்” என்று அம் மனுவில் தெரிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

புதுச்சேரி

# மகளிர் மட்டும்

இந்துஸ்தான் பெட்ரோலிய நிறுவனத்தின் சார்பில், புதுச்சேரி- லாஸ்பேட்டை இ.சி.ஆர் சாலையில் உள்ள பெட்ரோல் நிரப்பு நிலையத்தில் நேற்றைய தினம் மகளிருக்கென தனி வரிசையொன்று அமைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வினை போக்குவரத்து துறை அமைச்சர் சந்திரபிரியங்கா ஆரம்பித்து வைத்தார்.

இதன் போது சுமார் 100 பெண்களுக்கு இலவசமாகப் பெட்ரோல் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



காஞ்சிபுரம்

# இளைஞரின் உயிரைப் பறித்த உடல் எடை

காஞ்சிபுரம் மாவட்டம் சோமங்கலம், கருணீகர் தெருவை சேர்ந்தவர் சூர்யா.

21 வயதான இவர் அப்பகுதியில் பால் பக்கற் விநியோகத்தில் ஈடுபட்டு வந்துள்ளார். இந்நிலையில், அண்மையில் தனது உடல் எடையைக் குறைப்பதற்காக, உடல் எடை குறைப்பு நிறுவனமொன்றை நாடிய சூர்யா, அங்கு தரும் மருந்துகளை, கடந்த 10 நாட்களாக உட்கொண்டு வந்துள்ளார்.

இதன் காரணமாக நாளடைவில் அவரது உடல் எடை குறைய ஆரம்பித்துள்ளது. இந்நிலையில் கடந்த 1ஆம் திகதி இரவு, சூர்யாவுக்கு எதிர்பாராத விதமாக மயக்கம் ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து சூர்யாவை அவரது உறவினர்கள் உடனடியாக வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி கடந்த 3 ஆம் திகதி அவர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவமானது அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ள நிலையில் இது குறித்து சோமங்கலம் பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.



அமெரிக்கா

# 2ஆவது முறையாக பதவியேற்பு

அமெரிக்காவில் அண்மைக்காலமாக இந்தியர்கள் நீதிபதிகளாகப் பதவியேற்று வருகின்றனர்.



அந்த வகையில், கேரளாவைச் சேர்ந்த ஜூலி ஏ.மேத்யூ என்ற பெண், 15 ஆண்டுகளாக அமெரிக்காவில் சட்டத்தரணியாகப் பணிபுரிந்து வந்த நிலையில் கடந்த நான்கு வருடங்களுக்கு முன்னர் நீதிபதியானார்.

இதனையடுத்து அவருக்கு அந்நாட்டின் ‘முதல் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த பெண் நீதிபதி’ என்ற பெருமை கிடைத்தது. தற்போது, மீண்டும் இரண்டாம் தடவையாக அவர் டெக்சாஸ் மாகாணத்தில் இருக்கும் போர்ட் பெண்ட் கவுண்டில் நீதிபதியாகப் பதவியேற்றுள்ளார்.

இது குறித்து அவர் கூறுகையில் “இது தான் என் சிறப்பான பணி. இப் பணியை மிகவும் விரும்புகிறேன். இவ்விடயத்தில் எனது பெற்றோர், கணவர் என அனைவருமே எனக்கு மிகச்சிறந்த ஆதரவைத் தெரிவித்து தூண்களாக திகழ்கின்றனர்” என்றார்.

திருப்பூர்

# காதலியை உயிரோடு எரித்த காதலன்

திருப்பூர் மாவட்டம், பெத்தாம்பாளையம் காட்டுப்பகுதியில் நேற்று முன்தினம் மாலை, உடலில் தீக்காயங்களுடன் யுவதியொருவர் “என்னைக் காப்பாற்றுங்கள்” என அலறியடித்தபடி பிரதான வீதிக்கு ஓடி வந்துள்ளார்.



இதனைப் பார்த்து அதிர்ச்சியடைந்த அப்பகுதி மக்கள் இது குறித்து உடனடியாகப் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தியுள்ளனர்.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார்,அப்பெண்ணை மீட்டு வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

இதற்கிடையில் அப்பெண்ணுக்கு தீ வைத்து விட்டு மோட்டார் சைக்கிளில் தப்பி செல்ல முயன்ற இளைஞரும் கீழே விழுந்து படுகாயமடைந்துள்ளார்.

இதனையடுத்து குறித்த இளைஞரை மீட்ட பொலிஸார் அவரையும் சிகிச்சைக்காக வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

இந்நிலையில் பொலிஸாரின் விசாரணையில் பாதிக்கப்பட்ட பெண்ணின் பெயர் பூஜா எனவும், அவர் வடமாநிலத்தைச் சேர்ந்தவர் எனவும், தனது உறவினர் ஒருவரது வீட்டில் தங்கியிருந்து குறித்த பகுதியில் உள்ள தனியார் நிறுவனமொன்றில் பணிபுரிந்துவந்துளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அவர் அந்நிறுவனத்தில் பணியாற்றி வரும் லோகேஷ் என்பவரைக் காதலித்து வந்துள்ளார் எனவும், நாளடைவில் தன்னைத் திருமணம் செய்துகொள்ளும் படி லோகேஷை அவர் வற்புறுத்தி வந்துள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து அவரது வற்புறுத்தலால் ஆத்திரமடைந்த லோகேஷ், நேற்றுமுன்தினம் தனது மோட்டார் சைக்கிளில் வைத்திருந்த பெட்ரோலை பூஜா மீது ஊற்றி தீ வைத்துள்ளார் எனத் தெரிய வந்துள்ளது.

இந்நிலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த பூஜா நேற்றைய தினம் சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

## மூன்றாம் காலாண்டில் சிறந்த நிதி வளர்ச்சியை

# பதிவு செய்தது யூனியன் அஷ்யூரன்ஸ்

யூனியன் அஷ்யூரன்ஸ், 2022 இன் மூன்றாம் காலாண்டில் சவால்கள் நிறைந்த சந்தைச் சூழலிலும் உறுதியான நிதிப் பெறுபேறுகளைப் பதிவு செய்திருந்தது.



மூன்றாம் காலாண்டில் இரண்டாம் மிகப் பெரிய புதிய வியாபார கட்டுப்பண உருவாக்குநராக யூனியன் அஷ்யூரன்ஸ் உயர்வடைந்திருந்தது. தொழிற்துறையில் காணப்படும் சிறந்த 5 செயற்பாட்டாளர்கள் மத்தியில், நேர்த்தியான வழமையான வியாபார கட்டுப்பணத்தை பதிவு செய்திருந்த இரு நிறுவனங்களில் ஒன்றாக திகழ்ந்ததுடன், 10% வளர்ச்சியைப் பெற்றிருந்தது. 2022 செப்டெம்பர் 30 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஒன்பது மாத காலப்பகுதியில் மிகச் சிறந்த இரட்டை இலக்க வளர்ச்சியாக இது அமைந்திருந்தது.

2021 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில், மூன்றாம் காலாண்டு நிதிப் பெறுபேறுகள் குறிப்பிடத்தக்களவு வளர்ச்சியைப் பதிவு செய்திருந்தன. நிறுவனத்தின் வரிக்கு முன்னைய இலாபம் ரூ. 333 மில்லியனிலிருந்து 14%இனால் அதிகரித்து ரூ. 379 மில்லியனாக பதிவாகியிருந்தது. மொத்த தேறிய வருமானம் ரூ. 5.22 பில்லியனிலிருந்து 33%இனால் அதிகரித்து ரூ. 6.95 பில்லியனாக பதிவாகியிருந்தது. நிகர செலுத்தப்பட்ட கட்டுப்பணப் பெறுமதி ரூ. 3.96 பில்லியனிலிருந்து ரூ. 4.10 பில்லியனாக உயர்வடைந்திருந்ததுடன், தேறிய செலுத்தப்பட்ட கட்டுப்பண பெறுமதி ரூ. 3.78 பில்லியனிலிருந்து ரூ. 3.87 பில்லியனாக அதிகரித்திருந்தது. மேலும், நிறுவனம் 2021 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் செலுத்தியிருந்த ரூ. 1.3 பில்லியனுடன் ஒப்பிடுகையில், ரூ. 1.5 பில்லியனை நஷ்டஈடுகளாக செலுத்தியிருந்தது. தொழிற்படு இலாபம் ரூ. 293 மில்லியனிலிருந்து 8%இனால் அதிகரித்து ரூ. 318 மில்லியனாக உயர்வடைந்திருந்தது.

யூனியன் அஷ்யூரன்ஸ் பிரதம நிறைவேற்று அதிகாரி ஜுட் கோம்ஸ் நிறுவனத்தின் மூன்றாம் காலாண்டு நிதிப் பெறுபேறுகள் தொடர்பில் குறிப்பிடுகையில் “சவால்கள் நிறைந்த சூழலில் செயலாற்றிய போதிலும், பிரதான நிதிக் குறிகாட்டிகளில் சிறந்த வளர்ச்சியை நாம் பதிவு செய்திருந்தோம். வாடிக்கையாளர்களை மையப்படுத்திய எமது தந்திரோபாயம், சேவைச் சிறப்பு மற்றும் நாம் வழங்கும் புதிய தலைமுறை டிஜிட்டல் அனுபவங்கள் போன்றன எமது வெற்றிகரமான செயற்பாடுகளுக்கு காரணங்களாக அமைந்துள்ளன. இலங்கையர்களுக்கு தமது கனவுகளை தொடர்வதற்கு தமது புத்தாக்கமான நிபுணத்துவத்தை நிறுவனம் வழங்கி, நிதிசார் பின்னடைவுகளிலிருந்து பாதுகாப்பை வழங்கும்.” என்றார்.

யூனியன் அஷ்யூரன்ஸ் பிரதம நிதி அதிகாரி ஆஷா பெரேரா கருத்துத் தெரிவிக்கையில், “நிறுவனத்தின் தூரநோக்குடைய தந்திரோபாய நிதி முகாமைத்துவம் முக்கியத்துவம் வாய்ந்ததாகவும், பிரதான பிரிவுகளில் வளர்ச்சியை எய்துவதற்கு உதவியாக அமைந்திருந்தது. துரித தந்திரோபாயத்தில் நாம் தொடர்ச்சியாக கவனம் செலுத்துவதுடன், எமது வினைத்திறனான நிர்வாக கட்டமைப்புகள் மற்றும் செயன்முறைகளை தொடர்ந்து முன்னெடுத்து, நிறுவனத்தின் உறுதியான வளர்ச்சியை உறுதி செய்வோம்.” என்றார்.

2022 செப்டெம்பர் மாத நிறைவில் யூனியன் அஷ்யூரன்ஸ் மொத்த சொத்துக்கள் பெறுமதி ரூ. 73 பில்லியனாக பதிவாகியிருந்தது. இது 2021 ஆம் ஆண்டின் நிறைவில் ரூ. 70.8 பில்லியனாக காணப்பட்டது. ஆயுள் காப்புறுதி நிதியத்தின் மொத்த சொத்துக்கள் பெறுமதி ரூ. 61 பில்லியனாக காணப்பட்டது.

## சிறிய நடுத்தரளவு தொழில் முயற்சியாளர்களுக்கு

# செலான் வங்கி வழிகாட்டல்

செலான் வங்கி, தேசிய பொருளாதாரத்தில் பங்களிப்பு வழங்கக்கூடிய துறையாக சிறிய நடுத்தரளவு தொழில்முயற்சியாண்மை ஏற்றுமதியாளர்களை இனங்கண்டுள்ளது.



அந்நியச் செலாவணியில் வருமானமீட்டுவது என்பது பொருளாதாரத்தின் தற்போதைய அத்தியாவசிய தேவைகளில் ஒன்றாக அமைந்துள்ளது. அந்நியச் செலாவணி இருப்புகளின் வளர்ச்சியில் வெளிநாட்டுப் பணியாளர்களின் பங்களிப்பு பிரதான பங்களிப்பை வழங்கும் நிலையில், அவ்வாறு அனுப்பப்படும் பணத்தில் வீழ்ச்சி மற்றும் உத்தியோகபூர்வமற்ற சட்டவிரோதமான முறைகளில் வெளிநாடுகளிலிருந்து பணத்தை அனுப்பும் முறைகள் அதிகரித்துள்ள நிலையில், நாட்டின் அந்நியச் செலாவணி இருப்பில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதுடன், நாட்டின் வருமான மூலங்களிலும் வீழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இந்நிலையில், ஏற்றுமதியை அதிகரிப்பதனூடாக, இந்த செயன்முறையை வலுப்படுத்தக்கூடியதாக இருக்கும்.

செயற்பாடுகளுக்கான பிரதி பொது முகாமையாளர் மலிக் விக்ரமநாயக்க கருத்துத் தெரிவிக்கையில், “இலங்கையை இந்த நெருக்கடி நிலையிலிருந்து மீட்பதில் உள்நாட்டு ஏற்றுமதியாளர்கள் முக்கிய பங்காற்ற வேண்டியுள்ளது. எனவே, சிறிய நடுத்தரளவு தொழில் முயற்சியாண்மைத் துறையில், ஏற்றுமதியாளர்களை ஊக்குவிப்பதை செலான் வங்கி இலக்காகக் கொண்டுள்ளது. அதனூடாக, இந்த நெருக்கடியான சூழ்நிலையிலிருந்து இலங்கையை மீட்டெடுக்க ஆதரவளிக்கக்கூடியதாக இருக்கும்.” என்றார்.

விக்ரமநாயக்க தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில், “உள்நாட்டு ஏற்றுமதியாளர்களின் மீது கவனம் செலுத்த வேண்டியதை நாம் இனங்கண்டிருந்தோம், ஏனெனில் அதில் அதிகளவு வாய்ப்புகள் காணப்படுகின்றன. மேலும், ஏற்றுமதித் துறையில் பிரவேசிக்கும் பெருமளவான சிறிய நடுத்தரளவு தொழில்முயற்சியாளர்களுக்கு சிறந்த செயற்பாடுகள் மற்றும் தமது வியாபாரங்களை விரிவாக்கம் செய்வது தொடர்பில் போதியளவு வழிகாட்டல்கள் சில சந்தர்ப்பங்களில் வழங்கப்படுவதில்லை. எனவே, ஏற்றுமதியில் ஈடுபடும் சிறிய நடுத்தரளவு தொழில் முயற்சியாளர்களுக்கு அறிவூட்டி, வெளிநாட்டு கொள்வனவாளரின் தெரிவுக்குரிய வியாபார பங்காளராகத் திகழக்கூடிய வகையில் வலுவூட்டும் நடவடிக்கைகளை வங்கி முன்னெடுத்திருந்தது.” என்றார்.

ஏற்றுமதிச் சங்கிலி அடங்கலாக, வெளிநாட்டு தொடர்பாளர்களுடன் தொடர்பாடல்களை பேணும் சிறிய நடுத்தரளவு தொழில் முயற்சியாளர்களுக்கு தமது வியாபாரத்தை தக்க வைத்துக் கொள்வதில் அதிகளவு வெற்றிகரமாக இயங்கக்கூடியதாக இருக்கும். அதன் காரணமாக அறிவு பகிர்வு மற்றும் நிபுணத்துவத்தை கட்டியெழுப்புவது போன்றன அத்தியாவசியமாக அமைந்துள்ளன. விக்ரமநாயக்கவின் தலைமையின் கீழ், செலான் வங்கியின் வர்த்தக அணியினால், பாரம்பரிய முறைகளுக்கு அப்பாலான ஏற்றுமதி வாய்ப்புகளை இனங்காணப்பட்டிருந்ததுடன், தமது சிறிய நடுத்தரளவு தொழில் முயற்சி ஏற்றுமதியாளர் பிரிவுகளில் கறுவா, தேயிலை, கடலுணவு மற்றும் ஆடைத்தொழிற்துறை போன்ற தெரிவுகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

விக்ரமநாயக்க தொடர்ந்து தெரிவிக்கையில், “ஏற்றுமதித் துறைக்கு சில நிறுவனங்கள் புதிதாக ஈடுபட ஆரம்பித்துள்ளதால், சிறிய நடுத்தரளவு தொழில்முயற்சியாளர்களை இலக்கு வைக்கப்பட்டு ஆலோசனை வழங்கும் பணியை எமது பிரிவு முன்னெடுக்கின்றது. வழிகாட்டலினூடாக, அவர்களின் வருமானத்தை அதிகரித்துக் கொள்வது, ஏற்றுமதி பேரம்பேசல் மற்றும் கப்பலில் சரக்குகள் ஏற்றிய பின்னர் நிதி உதவிகள் முதல் ஏற்றுமதிக்கு அவசியமான மூலப்பொருட்களை இறக்குமதி செய்தல் வரை வங்கி தனது நிபுணத்துவத்தை சிறிய நடுத்தரளவு தொழில்முயற்சியாளர் வாடிக்கையாளர்களுடன் பகிர்ந்து கொள்கின்றது.” என்றார்.

மேலும், அதிகளவு தொழில்நுட்ப உள்ளம்சங்களைக் கொண்ட வர்த்தகம் என்பதால், பல சிறிய நடுத்தரளவு தொழில்முயற்சிகளுக்கு ஒரு தடையாக அமைந்திருக்கக்கூடும் என்பதால், செலான் வங்கியினால் பரிபூரண ஆலோசனை சேவைகள் வழங்கப்படுகின்றன. வர்த்தக செயன்முறையில் ஏற்றுமதியாளர்கள் எதிர்நோக்கும் பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுப்பது தொடர்பான வழிகாட்டல்கள் மற்றும் அவற்றை எதிர்கொள்ளும் வழிமுறைகள் பற்றிய உதவிகளை பெற்றுக் கொள்வதுடன், ஆவணப்படுத்தல் மற்றும் சரியான ஏற்றுமதி சந்தைகளை கையகப்படுத்தல் போன்ற தமது வியாபார செயற்பாடுகளை முன்னெடுக்க அவசியமான வழிகாட்டல்களும் வழங்கப்படுகின்றன.



# மத்திய பிரதேசத்தின் இந்தூர் நகரில்

# பிரவாசி பாரதிய திவாஸ் மகாநாடு

## இலங்கையில் இருந்து கோபியோ பேராளர்கள் இருபது பேர் பங்கேற்பர்



இந்திய பிரதமர் மோடி



இந்திய ஜனாதிபதி திரௌபதி முர்மு



வெளியுறவு அமைச்சர் எஸ். ஜெய்சங்கர்



கோபால் பாக்லே



மத்தியப்பிரதேச முதலமைச்சர் சிவராஜ்



டொக்டர் முஹம்மது இர்ஃபான்



சாத் சந்தோகி



மஸ்கரென்ஹாஸ்



**காயத்ரி விக்கிரமசிங்க**

(கொழும்பு மாநகரசபை உறுப்பினர்)

வெளிநாடு வாழ் இந்தியர்களை ஒன்றிணைக்கும் 'பிரவாசி பாரதிய திவாஸ்' (*Pravasi Bharatiya Divas*) அமைப்பின் 17 ஆவது மகாநாடு 2023 ஜனவரி 8ஆம் திகதி முதல் 10 ஆம் திகதி வரை இந்தியாவின் மத்தியப்பிரதேச மாநிலத்தின் இந்தூர் நகரில் நடைபெறவிருக்கிறது.

இந்திய வெளியுறவு அமைச்சும் மத்தியப்பிரதேச மாநில அரசாங்கமும் இணைந்து நடத்தும் இந்த மகாநாட்டின் தொனிப்பொருள் 'புலம்பெயர் சமூகம்; நற்காலத்தில் இந்தியாவின் முன்னேற்றத்துக்கான நம்பகமான பங்காளர்கள்' (*Diaspora ; Reliable Partners for India's Progress in Amrit Kaal*) என்பதாகும். நற்காலம் (அம்றிற் கால்) என்பது அடுத்த 25 வருடங்கள் மீது கவனத்தைச் செலுத்துகிறது. இந்த சொல்லை முதலில் இந்திய பிரதமர் நரேந்திர மோடி 2021 ஒக்டோபரில் பயன்படுத்தினார். இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் பாராளுமன்றத்தில் 2022 --2023 மத்திய பட்ஜெட்டை சமர்ப்பித்தபோது 'அம்றிற் கால்' சொல்லைப் பயன்படுத்தினார். அடுத்த 25 வருடங்களை குறிப்பிடுவதற்கு இந்த சொல் பொதுவில் பயன்படுத்தப்படுகிறது.

இரு வருடங்களுக்கு ஒரு முறை நடைபெறும் 'பிரவாசி பாரதிய திவாஸ்' மகாநாடு இந்திய அரசாங்கத்துடனான வெளிநாட்டு இந்திய சமூகத்தின் ஊடாட்டத்தை பலப்படுத்துவதற்கும் தங்களது வேர்களுடன் அவர்களை மீள இணைப்பதற்கும் உதவுகிறது.

தெரிவுசெய்யப்பட்ட இந்தியர்களுக்கு இந்த மகாநாட்டின்போது கீர்த்திமிகு 'பிரவாசி பாரதிய சம்மான்' விருது வழங்கிக் கௌரவிக்கப்படுகிறது. இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் அவர்கள் பல்வேறு துறைகளில் ஆற்றிய பங்களிப்புகளை அங்கிகரித்து கௌரவிப்பதற்கே இந்த விருது வழங்கப்படுகிறது.

இதுவரையில் ஸ்ரீகிருஷ்ணா கோர்ப்பரேசன் தலைவரும் கார்சன்; குழுமத்தின் பணிப்பாளருமான மனோ செல்வநாதன் ஆகியோர் இந்த விருதைப் பெற்ற இலங்கையராக விளங்குகிறார். அதனால் தங்களது துறைகளில் சாதனைகள் படைத்த மேலும் பல இலங்கையர்களுக்கு விருது வழங்கப்படவேண்டும் என்று வலியுறுத்தப்பட்டு வந்தது. இவ்வாறு வலியுறுத்தியவர்களில் மலையக மக்கள் முன்னணியின் காலஞ்சென்ற தலைவர் பெரியசாமி சந்திரசேகரன் குறிப்பிடத்தக்கவர். இப்போது அதன் தலைவர் பெ. இராதாகிருஷ்ணன் அவ்வாறு கோரிக்கை விடுத்துவருகின்றார்.

இத்தடவை எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் சிலோன் நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளரும் கோபியோ இலங்கை அமைப்பின் தலைவருமான சிவகுமார் நடேசனுக்கு 'பிரவாசி பாரதிய சம்மான்' விருது வழங்கப்படவிருக்கிறது.

இந்தூர் மகாநாட்டில் பங்குபற்றும் பேராளர்கள் ஜனவரி 26 நடைபெறவிருக்கும் இந்திய குடியரசு தினக்கொண்டாட்டங்களிலும் பங்கேற்க வாய்ப்பிருக்கிறது.

மகாநாட்டின் முதல் நாள் 'இளைஞர் பிரவாசி பாரதிய திவாஸ்' வெளியுறவு அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்சங்கரினால் ஆரம்பித்து வைக்கப்படும். தொடக்கவுரையை மத்திய இளைஞர் விவகார, விளையாட்டுத்துறை அமைச்சர் அநுராக் சிங் தாகூர் நிகழ்த்துவார். மத்தியப்பிரதேச முதலமைச்சர் சிவராஜ் சிங் சௌகானும் அவுஸ்திரேலிய பாராளுமன்ற உறுப்பினர் சனீட்டா மஸகாரினாஸும் கௌரவ அதிதிகள் என்ற வகையில் சிறப்புரைகளை நிகழ்த்துவர். இந்த ஆரம்ப கூட்டத்தொடரில் 'புத்தாக்கம் மற்றும் நவீன தொழில்நுட்பவியலில் புலம்பெயர் இந்திய சமூக இளைஞர்களின் வகிபாகம்' குறித்து கலந்துரையாடப்படும்.

இந்தியாவின் மென்சக்தியைப் பயன்படுத்துதல், சிறு தொழில்கள், உணவு தயாரிப்பு மற்றும் படைப்பாற்றல் ஊடாக நல்லெண்ணத்தை பரப்புதல், இந்திய தொழிற்படையின் உலகளாவிய நகர்வை மேம்படுத்துதல் - புலம்பெயர்ந்த இந்தயர்களின் பங்கு, தேசத்தின் கட்டமைப்பில் அனைவரையும் உள்வாங்கும் அணுகுமுறை ஊடாக புலம்பெயர்ந்த பெண் தொழில் முயற்சியாளர்களின் வலுவாற்றலை பயன்படுத்திக்கொள்ளல் ஆகிய தலைப்புக்களில் கலந்துரையாடல்கள் இடம்பெறும்.

இரண்டாம் நாள் கௌரவ அதிதியாக கலந்துகொள்ளும் சூரினாம் குடியரசின் ஜனாதிபதி சந்திரகிபெர்சாட் சன்டோக்கியும் பிரதம அதிதியான கயான கூட்டுறவு குடியரசின் ஜனாதிபதி கலாநிதி முஹமட் இர்ஃபான் அலியும் உரை நிகழ்த்துவார்கள்.

முக்கிய உரையை இந்திய பிரதமர் மோடி நிகழ்த்துவார். அதை தொடர்ந்து 'இந்திய சுதந்திரப் போராட்டத்துக்கு புலம்பெயர் இந்திய சமூகத்தின் பங்களிப்பு' என்ற தொனிப்பொருளிலான கண்காட்சியை பிரதமர் திறந்துவைப்பார்.

இரண்டாம் நாளின் முதற் கூட்டத்தொடர் 'இந்திய சுகாதாரப் பராமரிப்பு, அம்றிற் கால் மற்றும் நோக்கு 2047 மேம்படுத்தலுடன்' தொடர்புடைய விவகாரங்களை கையாள ஒதுக்கப்பட்டுள்ளது.

மாலை நேர கூட்டத்தொடரில் ஜி -20 நாடுகளின் இந்திய தலைமைத்துவம் குறித்து ஆராயப்படும். ஜி 20 தலைமை என்ற வகையில் இந்தியாவின் உலகளாவிய அணுகுமுறை பற்றி ஜி -20 பிரதம ஒருங்கிணைப்பாளர்களான ஹர்ஷ்வர்தன் சிறிங்லாவும் அமாதாப் காந்தும் உரையாற்றுவர்.

பல்வேறு துறைகளில் சிறப்பாக பணியாற்றிவரும் வெளிநாட்டு இந்தியர்களுக்கு விருதுகள் வழங்கப்படுகின்றன. இவர்கள் இந்தியாவுடனான தொடர்புகளையும் இந்தியாவின் புகழையும் மேம்படுத்தவும் இந்திய வம்சாவளி மக்களின் வளர்ச்சிக்கும் பெரும் பங்களிப்புச் செய்தவர்கள். முன்னென்றும் இல்லாதவாறு இந்திய மத்திய அரசின் கவனம் அண்மைக்காலமாக வெளிநாடுகளில் சிறப்பாக பணியாற்றும் இந்திய வம்சாவளியினர் மீது திரும்பியிருக்கிறது. 2003 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 ஆம் ஆண்டில் இறுதியாக நடைபெற்ற மகாநாடுவரை 269 வெளிநாட்டு இந்தியர்கள் விருதுகளைப் பெற்றிருக்கிறார்கள்.

பிரவாசி பாரதிய சம்மான் விருதுகள் விழாவின் இறுதி நாளன்று இந்திய ஜனாதிபதி திரௌபதி முர்முவினால் வழங்கப்படும். பிரியாவிடை உரையையும் அவரே நிகழ்த்துவார்.

குமார் நடேசன் தலைமையில் இந்திய வம்சாவளி மக்கள் மகாசபையின் ( *Global Organisation of People of Indian Origin* ) கோபியோ இலங்கைப்பிரிவின் இருபது பேராளர்களைக் கொண்ட குழு 17 ஆவது பாரவாசி பாரதிய திவாஸ் மகாநாட்டில் பங்கேற்கிறது.

இந்த மகா நாட்டை தொடர்ந்து பல வரப்பிரசாதங்கள் விருதுகள் பலருக்கு கிடைக்க வாய்ப்பிருப்பதாக வெளிநாடுவாழ் இந்திய பிரசைகளின் இலங்கை உறுப்பினர்கள் நம்பிக்கையுடன் எதிர்பார்க்கிறார்கள்.

உலகளாவிய ரீதியில் வாழும் 2 கோடி 80 இலட்சம் இந்திய வம்சாவளி மக்களின் நலவுரிமைகளையும் அபிலாசைகளையும் மேம்படுத்துவதற்காக இந்திய வெளிவிவகார அமைச்சு வெளிநாட்டு இந்தியர் விவகாரங்களைக் கவனிக்கவென்று தனியான பிரிவை அமைத்துச் செயற்படுத்திவருகிறது.

மத்திய அரசின் வெளிநாடுவாழ் இந்தியர் விவகாரத் துறை வெளியிட்டிருக்கும் புள்ளி விபரத்தின் படி, உலகெங்கிலுமுள்ள 208 நாடுகளில் ஏறத்தாழ 3.32 கோடி இந்தியர்கள் வாழ்கிறார்கள். அவர்களில் 70% பேர் ஒன்பது நாடுகளில் இருப்பதாகப் புள்ளிவிவரம் தெரிவிக்கிறது. அமெரிக்கா (46.6 இலட்சம்), சவூதி அரேபியா (40 இலட்சம்), மலேசியா (24 இலட்சம்), ஐக்கிய அரபு அமீரகம் (28 இலட்சம்) என்று வெளிநாடுவாழ் இந்தியர்கள் பல்வேறு நாடுகளில் வாழ்ந்து வருகின்றனர்.

வெளிநாட்டில் குடியேறிய இந்தியர்கள், அவர்கள் குடியேறிய நாடுகளை மேம்படுத்தி இருக்கிறார்கள் என்பது மட்டுமல்லாமல், அந்த நாடுகளில் தங்களது ஆளுமையை நிலைநாட்டியும் இருக்கிறார்கள். ஏறத்தாழ 11 நாடுகளில், 28 இந்திய வம்சாவளியினர் அந்த நாட்டின் தலைமைப் பொறுப்பில் இருந்திருக்கிறார்கள். சிங்கப்பூரின் நாயர், நாதன், மோரீஷஸ் தீவின் பிரவீண் ஜகந்நாத், மலேசியாவின் மகாதீர் முகமது, போர்ச்சுகல் நாட்டின் அந்தோனியோ போஸ்டோ, நெதர்லாந்தின் லியோ வரத்கர் என்று ஒரு மிகப்பெரிய பட்டியலே இருக்கிறது.

அதுமட்டுமல்லாமல் இந்திய வம்சாவளியினர் எத்தனையோ பேர் பல்வேறு நாடுகளில் அமைச்சர்களாகவும், அரச உயர் பதவிகளிலும், ராஜ தந்திரிகளாகவும், நீதிபதிகளாகவும் இருந்திருக்கிறார்கள். சுமார் 160 பாராளுமன்ற உறுப்பினர்கள், 25க்கும் அதிகமான மாநகர மேயர்கள் என்று 20க்கும் அதிகமான நாடுகளில் இந்திய வம்சாவளியினர் பதவி வகித்திருக்கின்றனர்.

இந்தியாவில் உள்ள பின்தங்கிய சமூகங்களின் கல்வி,பொருளாதார மேம்பாட்டுக்கான பல செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தும் வெளிநாடுகளில் வாழும் இந்திய இளம் தலைமுறையினர் தமது பண்பாடுகளைப் பற்றி தெளிவாக அறிந்துகொள்ளும் நோக்கிலும் வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் பல திட்டங்களைச் செயற்படுத்தி வருகிறார்.

இந்திய அரசு பல சந்தர்ப்பங்களில் இலங்கையில் வாழும் சுமார் பதினாறு இலட்சம் இந்திய வம்சாவளி மக்களை இலங்கைத் தமிழர்களுடன் இணைத்துப்பார்த்து இரு சாராரையும் ஒன்றாகக் கணிக்க முற்பட்டது. இந்த தவறான அணுகுமுறை பற்றி பல தடவைகள் இந்திய மத்திய அரசிடம் நமது முன்னாள் தலைவர்களான அமரர்கள் சௌமியமூர்த்தி தொண்டமான் பெரியசாமி சந்திரசேகரன் ஆகிய இருவரும் மற்றும் முன்னாள் அமைச்சர் பி.பி. தேவராஜூம் சுட்டிக்காட்டியிருந்தனர்.

இலங்கைத் தமிழர்களை மதிக்கின்ற அதேவேளை எமது தனித்துவத்தை இந்திய அரசு அங்கிகரிக்கவேண்டும் என்பதோடு பிரதமர் மோடி அவர்களின் வழிநடத்தலின் கீழ் நடைபெறும் வெளிநாடு வாழ் இந்தியர்களை ஒன்றிணைக்கும் 17 ஆவது பிரவாசி பாரதிய திவாஸ் மகாநாடு உலகளாவிய பரந்து வாழும் இந்திய வம்சாவளி மக்களின் நலன்கள் தொடர்பாக ஆக்கபூர்வமான கருத்துக்களை முன்வைத்து திட்டங்களை முன்னெடுக்க வேண்டும் என்பது இலங்கைவாழ் இந்திய வம்சாவளி மக்களின் எதிர்பார்ப்பாகும்.

இலங்கையில் உள்ள இந்திய வம்சாவளி சமூகத்தவர்கள் இரட்டைக் குடியுரிமைக்கு விண்ணப்பிக்கும் போது இந்திய தூதரகத்தினால் கோரப்படும் ஆவணங்கள் பலவற்றை அவர்களால் சமர்ப்பிக்க முடியாமல் உள்ளது. மறு வார்த்தைகளில் சொல்வதானால் அவர்களால் முடியாத ஆவணங்களை தூதரகம் கோருகிறது. இது விடயத்தில் தூதரகம் கவனம் செலுத்தி இரட்டைக் குடியுரிமைக்கு விண்ணப்பிப்பவர்கள் எதிர்நோக்கும் சிக்கல்களுக்கு தீர்வு காணவேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்தில் வேண்டுகோள் விடுக்கிறோம்.

இலங்கை வாழ் இந்திய வம்சாவளி மக்களின் நலன்களில் மிகுந்த அக்கறையுடன் கவனம் செலுத்தி பல செயற்றிட்டங்ளை முன்னெடுத்துவரும் இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே இது விடயத்திலும் கருத்தூன்றிய கவனத்தைச் செலுத்தி உரிய நடவடிக்கை எடுப்பார் என்று எதிர்பார்க்கிறோம்.

வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள் தங்கள் தாய் நாட்டிற்கு உதவ வேண்டும், தங்கள் தொப்புள் கொடி உறவு தொடர வேண்டும் எண்ணத்துடன் வாழ்கின்றனர். இலங்கையில் வாழ்கின்ற இந்திய வம்சாவளியினருக்கும் மற்றைய நாட்டில் வாழ்கின்ற இந்திய வம்சாவளியினருக்கும் பாரிய வித்தியாசங்கள் இருக்கின்றன.

சுதந்திர இலங்கையில் சுமார் ஐம்பது ஆண்டுகள் நாம் நாடாற்றவர்களாக வாழ்ந்திருக்கின்றோம். எமது அரசியல் உரிமையை இழந்திருக்கின்றோம். அடிப்படை வசதிகள் இன்றி வாழ்ந்த ஒரு சமூகத்தினை மேம்படுத்த வேண்டும் என்பதே எமது வேண்டுகோளாகும்.



தென்னாபிரிக்காவுக்கெதிரான மூன்றாவது டெஸ்டில்

# ஆதிக்கம் செலுத்தும் அவுஸ்திரேலியா

தென்னாபிரிக்காவுக்கெதிரான மூன்றாவது டெஸ்டில் அவுஸ்திரேலியா ஆதிக்கம் செலுத்துகிறது.

சிட்னியில் நேற்று முன்தினம் ஆரம்பித்த இப்போட்டியின் நேற்றைய இரண்டாம் நாளை தமது முதலாவது இனிங்ஸில் 2 விக்கெட்டுகளை இழந்து 147 ஓட்டங்களுடன் ஆரம்பித்த அவுஸ்திரேலியா, உஸ்மான் கவாஜா, ஸ்டீவ் ஸ்மித் மூலம் ஓட்டங்களைக் குவவித்தது.



இந்நிலையில், 104 ஓட்டங்களுடன் கேஷவ் மஹராஜ்ஜிடம் ஸ்மித் வீழ்ந்த நிலையில், தொடர்ந்து வந்த ட்ரெவிஸ் ஹெட்டும் ஓட்டகளை வேகமாகப் பெற்றிருந்தார்.

பின்னர் 70 ஓட்டங்களுடன் ஹெட்டும் ககிஸோ றபாடாவிடம் வீழ்ந்த நிலையில், நேற்றைய இரண்டாம் நாள் முடிவில் தமது முதலாவது இனிங்ஸில் 4 விக்கெட்டுகளை இழந்து 475 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

தற்போது களத்தில் கவாஜா 195 ஓட்டங்களுடனும், மற் றென்ஷோ ஐந்து ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமலுள்ளனர்.

# சம்பியனான காத்தான்குடி பூப்பந்தாட்டக் கழகம்

அஸ்ஹர் இப்றாஹிம்

ஏறாவூர் பூப்பந்தாட்டக் கழகத்தால் நடாத்தப்பட்ட ஒன்பது அணிகள் பங்குபற்றிய லீக் முறையிலான பூப்பந்தாட்டத் தொடரில் காத்தான்குடி பூப்பந்தாட்டக் கழகம் சம்பியனானது.

இதேவேளை, நிஸ்பர் ஹனீப், முஹம்மட் புகாரி ஆகியோருக்கு விருதுகளும், பணப்பரிசில்களும் வழங்கப்பட்டன.




அயர்லாந்துக்கெதிரான இருபதுக்கு – 20 தொடருகான

# சிம்பாப்வே குழாமில் இங்கிலாந்து வீரர்

அயர்லாந்துக்கெதிரான இருபதுக்கு - 20 தொடருக்கான சிம்பாப்வேக் குழாமில் இங்கிலாந்தின் துடுப்பாட்டவீரர் கரி பலன்ஸ் இடம்பெற்றுள்ளார்.

இறுதியாக 2017ஆம் ஆண்டு இங்கிலாந்துக்காக விளையாடிய 33 வயதான பலன்ஸ், 2006ஆம் ஆண்டு 19 வயதுக்குட்பட்டோருக்கான உலகக் கிண்ணத் தொடரில் சிம்பாப்வேயை பிரதிநிதித்து வப்படுத்திருந்தார்.

இந்நிலையில், ஐக்கிய அரபு அமீரக இருபதுக்கு - 20 தொடரில் விளையாடுவது காரணமாக சிகண்டர் ராசாவுக்கு இக்குழாமில்



விலக்களிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, வேகப்பந்துவீச்சாளர் பிளஸிங்க் முஸர்பனி காயம் காரணமாக குழாமில் இடம்பெறாததோடு, றெஜிஸ் சகப்வா, மில்டன் ஷும்பா ஆகியோர் குழாமில் இடம்பெறவில்லை.

இந்நிலையில், துடுப்பாட்டவீரர்கள் இனொசென்ட் கையாவும், தடிவனஷே மருமனியும், வேகப்பந்துவீச்சாளர் விக்டர் நயுச்சியும் குழாமில் இடம்பெற்றுள்ளனர்.

குழாம்: கிறேய்க் எர்வின் (அணித்தலைவர்), கரி பலன்ஸ், றயான் பேர்ள், தென்டாய் சட்டாரா, பிராட்லி இவான்ஸ், லுக் ஜொங்வி, இனொசென்ட் கையா, கிளைவ் மடன்டே, வெஸ்லி மட்ஹெவெரே, தடிவனஷே மருமனி, வெலிங்டன் மஸகட்ஸா, டொனி முன்யொங்கா, றிச்சர்ட் நகரவா, விக்டர் நயுச்சி, ஷோன் வில்லியம்ஸ்.

நியூசிலாந்துக்கெதிரான இரண்டாவது டெஸ்டில்

# 408 ஓட்டங்களைப் பெற்ற பாகிஸ்தான்

நியூசிலாந்துக்கெதிரான இரண்டாவது டெஸ்டின் தமது முதலாவது இனிங்ஸில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 408 ஓட்டங்களை பாகிஸ்தான் பெற்றுள்ளது.

கராச்சியில் கடந்த திங்கட்கிழமை ஆரம்பித்த இப்போட்டியில் துடுப்பாட்டத்தில், செளட் ஷகீல் ஆட்டமிழக்காமல் 125, இமாம்-உல்-ஹக் 83, சஃப்ராஸ் அஹ்மட் 78, அக்ஹா சல்மான் 41 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில், அஜாஸ் பட்டேல், இஷ் சோதி ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளையும், அணித்தலைவர் டிம் செளதி, மற் ஹென்றி, டரைல் மிற்செல் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.



முன்னதாக தமது முதலாவது இனிங்ஸில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 449 ஓட்டங்களை நியூசிலாந்து பெற்றிருந்தது.

இலங்கைக்கெதிரான இருபதுக்கு – 20 தொடரிலிருந்து

# சாம்ஸன் விலகல்; ஜிதேஷ் ஷர்மா சேர்ப்பு

முழங்கால் காயமொன்று காரணமாக, இலங்கைக்கெதிரான இந்தியாவின் இருபதுக்கு - 20 சர்வதேசப் போட்டித் தொடரிலிருந்து சஞ்சு சாம்ஸன் விலகியுள்ளார்.

இந்நிலையில், புதுமுக விக்கெட் காப்பாளரான ஜிதேஷ் ஷர்மா முதற்தடவையாக குழாமுக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

அந்தவகையில், சஞ்சு சாம்ஸன் இல்லாத நிலையில் ராகுல்ட் ட்ரிபாதி இந்தியாவுக்கான அறிமுகத்தை மேற்கொள்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.



மியன்மார்

# ஆங் சாங் சூகி விடுதலை?

மியன்மாரில் இராணுவ ஆட்சிக்கு எதிராக போராடியவரும், அமைதிக்கான நோபல் பரிசு பெற்றவருமான ஆங் சான் சூகி தலைமையிலான தேசிய ஜனநாயக லீக் கூட்டணி, 2020ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் ஆட்சியைப் பிடித்தது.

எனினும்,இத்தேர்தலில் மோசடி நடந்ததாகக் கூறி ஆங் சாங் சூகியின் ஆட்சியைக் கவிழ்த்த இராணுவம், மீண்டும் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியது.

இதனையடுத்து இராணுவத்துக்கு எதிராக கிளர்ச்சியைத் தூண்டியமை, கொரோனா விதிகளை மீறியமை, சட்டங்களை மீறியமை, ஊழல் உள்ளிட்ட 11 குற்றச்சாட்டுகள் அவர் மீது சுமத்தப்பட்டன.

இதையடுத்து 76 வயதான ஆங்



சான் சூகிக்குச் சிறை தண்டனை விதிக்கப்பட்டது.

இந்நிலையில் மியான்மரின் 75வது சுதந்திர தினம் கொண்டாடப்பட உள்ள நிலையில் 7,012 கைதிகளை விடுவிக்க உள்ளதாக இராணுவம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து பேசியுள்ள இராணுவ தலைவர் மின் ஆங் "75வது சுதந்திர தினத்தையொட்டி 7,012 சிறைக் கைதிகள் விடுவிக்கப்பட உள்ளனர். கடுமையான குற்றங்களில் ஈடுபடாதவர்களின் தண்டனை காலம் குறைக்கப்படும். இந்த ஆண்டு இறுதியில் நாட்டில் தேர்தல் நடைபெறும். அனைவரும் ஒற்றுமையுடன் இருக்க வேண்டும்" என கூறியுள்ளார்.

மியான்மர் அரசியல் தலைவர் ஆங் சாங் சூகி இந்த விடுதலையாகும் கைதிகளின் பட்டியலில் உள்ளாரா என்பது தெரியவில்லை. விரைவில் தேர்தல் நடைபெற உள்ள நிலையில் அவர் விடுவிக்கப்படுவாரா என்ற எதிர்பார்ப்பு உள்ளது.

வியட்நாம்

# சிறுவனின் உயிரைப் பறித்த 115 அடிக் குழாய்

வியட்நாமில், டோங் தெப் மாகாணத்தில் கடந்த 31 ஆம் திகதி, சுமார் 115 அடி ஆழமும், 25 சென்டி மீற்றர் அகலமும் கொண்ட கொன்கிரீட் குழாய்க்குள் 10 வயதுச் சிறுவனொருவன் விழுந்துள்ளான்.

இதனையடுத்து குறித்த சிறுவனை மீட்க



அந்நாட்டு தீயணைப்பு மற்றும் மீட்புப் படையினர் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வந்தனர். எனினும் அவை அனைத்தும் தோல்வியிலே முடிவடைந்துள்ளன.

இந்நிலையில் பல மணி நேர போராட்டத்திற்குப் பின்னர் நேற்று முன்தினம் (04) குறித்த சிறுவன் சடலமாக மீட்கப்பட்டுள்ளான்.

இச்சம்பவமானது அப்பகுதி மக்கள் மத்தியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.



சீனா

# சீனாவைப் பந்தாடும் கொரோனா; இதுதான் காரணம்

சீனாவில் கொரோனாத் தொற்றுப் பரவலானது மீண்டும் தீவிரமடைந்து வருகின்றது.

இதன் காரணமாக சீனாவின் பல பகுதிகளிலும் கடுமையான ஊரடங்குக் கட்டுப்பாடுகள் அமல்படுத்தப்பட்டுள்ளன.

இந்நிலையில் சீனாவில் தற்போது ஏற்பட்டு கொரோனாப் பரவலுக்கு கொரோனாவின் மரபணு உருமாற்றமான ஒமிக்ரோன் B.A.5 மற்றும் BF.7ஆகியவையே 95 % காரணம் என உலக சுகாதார ஸ்தாபனம் அறிவித்துள்ளது.

அதேசமயம் சீனாவில் உள்ள நிலைமையை மிகவும் கவனமாக கண்காணித்து வருவதாகவும், இந்நோய்த் தாக்கம் குறித்த ஆய்வுகளை மேற்கொண்டு வருவதாகவும், தற்போது புதிய வகை உருமாற்றங்கள் கண்டறியப்பட்டுள்ளதாகவும் உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.





சவுதி அரேபியா

# பாலைவன நாட்டில் பெருக்கெடுக்கும் வெள்ளம்

மழைவீழ்ச்சி குறைந்த, பாலைவன நாடாக அறியப்படும் சவுதிஅரேபியாவில் கடந்த சில நாட்களாக கனமழை பெய்து வருகின்றது.

குறிப்பாக தலைநகர் ரியாத்தின் வடமேற்கில் இருந்து சுமார் 200 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள உஷைகர் பகுதியில் பெய்த கனமழையினால், அங்குள்ள ஒரு பாலத்தின் அடியில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடிவருகின்றது.

ஏற்கெனவே, அந்நாட்டின் 2ஆவது பெரிய நகரமான ஜெட்டாவில் நவம்பர் மாதம் பெய்த கனமழையால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் 2 பேர் உயிரிழந்திருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.



சீனா

# உலகின் உயரமான மனிதர் இவர்தான்

வடக்கு கானாவைச் சேர்ந்த 29 வயதான சுலைமானா அப்துல் சமத் உலகிலேயே உயரமான மனிதனாக அடையாளங்காணப்பட்டுள்ளார்.

ஊர் மக்களால் 'அவுச்சி' என அழைக்கப்படும் இவர் 9 அடி 6 அங்குலம் (2.89 மீற்றர்) உயரம் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அவர் இவ்வாறு உயரமாக இருப்பதற்கு மார்ஃபன் சிண்ட்ரோம் என்ற மரபணு கோளாரே காரணம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக அவரது உடல் பாகங்களின் வளர்ச்சி தடைப்படாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் அவரது மூளையில் ஒரு அறுவை சிகிச்சை செய்வதன் மூலம் இதனை குணப்படுத்த முடியும் என மருத்துவர்கள் தெரிவித்தனர்.

அவரின் அறுவை சிகிச்சைக்கு தேவையான பணத்திற்கு கானாவின் பொது மருத்துவ காப்பீடு துறையால் அனுமதி வழங்க முடியாத சூழலில், அடிப்படை சிகிச்சைகளை மட்டுமே



எடுத்து வருகிறார்.

இந்நிலையில் வீட்டில் இருந்தவாறே தொலைபேசி ரீசார்ஜ் செய்யும் பணியில் அவர் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது

இந்நிலையில் அவுச்சியைக்காண்பதற்காக தினமும் நூற்றுக்கணக்கான மக்கள் வருகை தருவதாகவும் இதனால் அப்பகுதியில் பிரபலமான ஒருவராக அவர் வலம் வருகின்றார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து அவுச்சி கூறும் போது,



"அல்லா என்னை இப்படி இருக்கவே படைத்துள்ளார். அதனால் உயரமாக இருப்பதில் எனக்கு எந்த பிரச்சினையும் இல்லை" எனத் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா

# சோகத்தில் நாசா

நாசாவால் மேற்கொள்ளப்பட்ட அப்பல்லோ 7 விண்வெளிப் பயணத்தின் கடைசி விண்வெளி வீரரான வால்டர் கன்னிங்ஹாம்(Walter Cunningham) தனது 90 ஆவது வயதில் காலமானார்.

கடந்த 1968ஆம் ஆண்டு மேற்கோள்ளப்பட்ட இவ்விண்வெளிப்பயணத்தில் பங்குபற்றிய எஃப் ஐசெல், வால்டர் எம். ஷிரா ஆகிய இருவரும் ஏற்கனவே இறந்துவிட்டனர்.

இந்நிலையில், வயதுமூப்பு மற்றும் உடல்நல பாதிப்பு காரணமாக வால்டர் கன்னிங்ஹாமும் கடந்த 3 ஆம் திகதி காலமானார்.





விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை 06 ஜனவரி 2023, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.